www.padippakam.com

நிலவும் சமுதாயத்தின் உற்பத்தி
சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும்
இடையிலான முரண்பாடு, மேல்கட்டுமானத்திற்கும்
அடிக்கட்டுமானத்திற்கும் இடையிலான
முரண்பாடு, வர்க்கப் போராட்டம் ஆகியவையும்
அவற்றின் விளைவுகளும் பல்வேறு
நிகழ்வுத் தொகுப்புகளாக மனிதனின்
ஐம்புலன்களின் வழியாக மூளையில்
பிரதிபலிக்கிறது. இத்தகைய பிரதிபலிப்புகள்
நிலவும் சமுதாயம் பற்றிய போதுமான
புலனறிவை – அச்சமுதாயம் முதிர்ச்சியடைந்த
நிலையில் – கொடுக்கின்றன.
இப்புலனறிவே புதிய சமுதாயம் பற்றிய
முன்னனுமானங்களைத் தரும்
பகுத்தறிவாக ஒரு பாய்ச்சலில் முன்னேறுகிறது.
பின், இக்கருத்துகள் முற்போக்கான வர்க்கங்களை
பிரதிநிதித்துவப் படுத்துவதாய் இருக்கையில்
அவற்றிடம் எடுத்துச் செல்லப்பட்டு
ஒரு பௌதீகச் சக்தியாக மாறுகின்றன.
அவை நிலவும் சமுதாய அடித்தளத்தையும்
மேல்கட்டுமானத்தையும் மாற்றி
புதிய அடித்தளத்தையும்
மேல்கட்டுமானத்தையும்
நிறுவும் அரசியல்,
சமூகப் புரட்சிக்கு வித்திடுகின்றன.

# தவறுகளுக்கு தத்துவார்த்த முலாம்

**கார்முகில்**

படிப்பகம்

www.padippkam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!



தநாம்ாலெக

படிப்பகம்

www.padippkam.com

# தவறுகளுக்கு
# தத்துவார்த்த முலாம்

**கார்முகில்**

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

முதற்பதிப்பு : பிப்ரவரி 1984
இரண்டாம் பதிப்பு : சனவரி 2004

விலை : ரூ 25

# உள்ளடக்கம்


1. 'இரு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகள்' என்ற மாநில அமைப்பு கமிட்டியினரின் கோட்பாடு மார்க்சிய இயங்கியலுக்கு விரோதமானது. 7
2. கோமிண்டாங் பிற்போக்குக் கும்பலின் "இரு கட்டப் புரட்சி கோட்பாட்டின்" போதகர்களாகிறார்கள் மா. அ. க. வினர் 16
3. ஒரு சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கும் புரட்சியின் இடைக் கட்டமும் - மா. அ. க. வினர் குழப்பம் 24
4. அடிப்படை முரண்பாடும் முதன்மை முரண்பாடும் - மாவோவின் மேற்கோளைத் திரித்துப் புரட்டுகின்றனர் மா. அ. க. வினர் 29
5. முதன்மை முரண்பாடும் அரசியல் அதிகாரமும் - புரட்சியின் இடைக் கட்டங்கள் மற்றும் குறிப்பான திட்டங்களை மறுக்கின்றனர் மா. அ. க. வினர். 34
6. சமுதாயத்தில் அடிப்படை முரண்பாடு பற்றிய மா. அ. க. வினரின் கண்டுபிடிப்பு மார்க்சியத்திற்கு எதிரானது; எதிர்ப்புரட்சிகரமானது. 46
7. முதன்மை முரண்பாடு பற்றிய கோட்பாட்டில் மா. அ. க. வினரின் முரண்பாடுகளில் மேலும் சில 63


படிப்பகம்

www.padippkam.com

மாநில அமைப்புக் கமிட்டி, இ.பொ.க.(மா-லெ) தமிழ்நாடு என்ற குழுவினர் வெளியிட்ட 'இந்திய சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளும், பிரதான முரண்பாடும்' என்ற அரசியல் கோட்பாட்டுக் கட்டுரையின் மீதான விமர்சனம்.

1

# 'இரு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகள்' என்ற மாநில அமைப்பு கமிட்டியினரின் கோட்பாடு மார்க்சிய இயங்கியலுக்கு விரோதமானது.

இன்றைய சமுதாயத்தில் இரண்டு நிகழ்ச்சிப் போக்குகள் இருப்பதாக மா. அ. க. வினர் கூறுகின்றனர். 1) நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட இந்திய மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டை தோற்றுவாயாகக் கொண்டு விவசாயிகளின் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்டிருக்கும் ஜனநாயகப் புரட்சி என்ற ஒரு நிகழ்ச்சிப் போக்கும் 2) ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாட்டை தோற்றுவாயாகக் கொண்டு சுதந்திரம், விடுதலையை மையமாகக் கொண்ட தேசியப் புரட்சி என்ற மற்றொரு நிகழ்ச்சிப் போக்கும் நிலவுவதாகக் கூறுகின்றனர்.

எந்த ஒரு பொருள் அல்லது சமுதாயமும் அதைவிட உயர்ந்த அதற்கு அடுத்த கட்டமான ஒரு பொருள் அல்லது சமுதாயத்தை மட்டுமே கொண்டிருக்கிறது என்பதால் எந்த ஒரு சமுதாய அமைப்பும் சமுதாய வளர்ச்சியின் ஒரே நிகழ்ச்சிப் போக்கை (Process of development of society) மட்டுமே கொண்டிருக்க முடியும். உதாரணமாக முதலாளித்துவ சமுதாயம் அதற்கு அடுத்த உயர்ந்த கட்ட சமுதாயமான

படிப்பகம்

www.padippkam.com



சோசலிச சமுதாயமாக மட்டுமே மாற முடியும் என்பதால் முதலாளித்துவ சமுதாயத்தில் சோசலிசப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கு மட்டுமே இருக்கிறது. அதற்கு அடிப்படையாக தனி உடைமைக்கும் உற்பத்தியில் சமூகத் தன்மைக்கும் இடையிலான முரண்பாடு இருக்கிறது. இது வர்க்க அரங்கில் முதலாளி வர்க்கத்துக்கும், தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடாக வெளிப்படுகிறது.

நிலப்பிரபுத்துவ சமுதாயம் அதற்கு அடுத்த கட்ட சமுதாயமான முதலாளித்துவ சமுதாயமாக மட்டுமே வளரமுடியும் என்பதால் நிலப்பிரபுத்துவ சமுதாயம் ஒரு முதலாளித்துவ சமுதாயத்தைப் படைப்பதற்கான முதலாளிய ஜனநாயகப் புரட்சி எனும் நிகழ்ச்சிப் போக்கை மட்டுமே பெற்றிருக்கிறது. நிலப்பிரபுத்துவ சமுதாயம் முதலாளித்துவ சமுதாயமாக மாறும் நிகழ்ச்சிப் போக்கு நிறைவுறாமல் இருக்கும்போதே நிலப்பிரபுத்துவ சமுதாயம் நிலவும் நாடுகளை ஏகாதிபத்தியங்கள் காலனிகளாகவோ, அரைக்காலனிகளாகவோ, நவீன காலனி அல்லது சார்பு நாடுகளாகவோ மாற்றிக்கொண்டு தமது மூலதன ஆதிக்கத்தையும் சுரண்டலையும் நிறுவி அந்நாடுகளின் அரைநிலப்பிரபுத்துவ மற்றும் பிற்போக்கு வர்க்கங்களுடன் கூட்டமைத்துக் கொள்ளும்போது கூட இத்தகைய நாடுகளில் முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்னும் சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கே நிலவுகிறது. ஆனால் இப்போது சுதந்திரமான, விரைவான, விரிவான தேசிய முதலாளிய உற்பத்தி முறையின் வளர்ச்சிக்கு தடையாக நிலப்பிரபுத்துவம் மட்டுமின்றி ஏகாதிபத்திய மூலதன ஆதிக்கமும் சேர்ந்து விடுகிறது.

அதாவது முதலாளிய ஜனநாயகப் புரட்சி எனும் நிகழ்ச்சிப் போக்கின் சாராம்சத்தை தீர்மானிக்கும் அடிப்படை முரண்பாடுகளாக நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு மட்டுமின்றி ஏகாதிபத்தியத்துக்கும் நாட்டுக்கும் இடையிலான முரண்பாடும் சேர்ந்து விடுகிறது.

இவ்விரு முரண்பாடுகளும் இணைந்தே இத்தகைய சமுதாயங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் சாராம்சத்தை தீர்மானிக்கின்றன. மேலும் இவ்விரு முரண்பாடுகளும் தீர்க்கப்படும்போதுதான் முதலாளிய ஜனநாயகப் புரட்சி எனும் நிகழ்ச்சிப் போக்கும் அதன் சாராம்சமும்



இந்நாடுகளில் நிறைவுறுகின்றன. புதிய ஜனநாயக சமுதாயம் மலருகின்றது. சோசலிசப் புரட்சி என்ற புதிய நிகழ்ச்சிப் போக்குத் தொடங்குகிறது.

மாவோ கூறினார் :

> "ஒரு பொருளினுடைய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கில் உள்ள அடிப்படை முரண்பாடும் அந்த அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்பட்ட அந்த நிகழ்ச்சிப் போக்கின் சாராம்சமும் அந்த நிகழ்ச்சிப் போக்கு நிறைவு பெறும்வரை மறையாது"
>
> —முரண்பாடுகள் பற்றி (MSW 669 NBA)

எனவே ஒவ்வொரு சமுதாயமும் அதற்கு அடுத்த உயர்ந்த கட்ட சமுதாயமாக மாறும் நிகழ்ச்சிப் போக்கைக் கொண்டுள்ளது. அந்நிகழ்ச்சிப் போக்கின் சாராம்சத்தைத் தீர்மானிக்கின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படை முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. அடிப்படை முரண்பாடுகள் தீரும்போது அந்நிகழ்ச்சிப் போக்கின் சாராம்சமும் (அந்நிகழ்ச்சிப் போக்கும்) முடிவடைகிறது என்பது தெளிவு.

ஒரு சமுதாயத்தில் அடிப்படை முரண்பாடுகள் ஒன்றாக இருப்பினும் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருப்பினும் அது அதற்கு அடுத்து உயர்ந்த கட்டமாக வேறு ஒரு சமுதாயமாக மட்டுமே மாறக்கூடியதாகும். அடிப்படை முரண்பாடுகள் இரண்டாக இருப்பினும் தீர்வு வேறு ஒரு சமுதாயத்திற்கே இட்டுச்செல்லக் கூடியதாகும். எனவே ஒரு சமுதாயம் என்பது சமுதாய வளர்ச்சியின் ஒரே நிகழ்ச்சிப் போக்கை மட்டுமே கொண்டதாயிருக்கிறது. ஆனால் இந்திய சமுதாயத்தில் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தேசியப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கும் இருப்பதாக மா. அ. க. வினர் கூறுகின்றனர். ஆனால் இவர்கள் கூறும் இவ்விரு நிகழ்ச்சிப் போக்குகளும் முடிவடையும்போது இரண்டு புதிய சமுதாயங்களோ இரண்டு புதிய நிகழ்ச்சிப் போக்குகளோ தோன்றுவது இல்லை. இரண்டு அடிப்படை முரண்பாடுகளும் தீரும்போது புதிய ஜனநாயக சமுதாயம் என்ற ஒரே சமுதாயமும், சோசலிசப் புரட்சி என்ற ஒரே நிகழ்ச்சிப் போக்கும் மட்டுமே தோன்றுகின்றன.

படிப்பகம்

www.padippkam.com



எனவே 'இரு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகள்' பற்றிய மா. அ. க. வினர் கோட்பாடு ஒவ்வொரு சமுதாயமும் அதற்கு அடுத்த உயர்ந்த கட்ட சமுதாயமாக மாறுவதற்கான (அடிப்படை முரண்பாடுகள் ஒன்றானாலும் இரண்டானாலும்) ஒரே நிகழ்ச்சிப் போக்கை மட்டுமே கொண்டிருக்கிறது என்பதை மறுக்கிறது. இங்கு சமுதாய வளர்ச்சியின் புதிய நிகழ்ச்சிப் போக்கின் தோற்றம் பற்றி மாவோ கூறுவது கவனிக்கப்படவேண்டும்.

அவர் கூறுகிறார் :

"ஒரு புதிய நிகழ்ச்சிப் போக்கின் தோற்றம் என்பதற்குப் பொருள் என்ன? ஒரு பழைய எதிர்மறைகளை உறுப்புகளாய் கொண்ட ஒரு அமைப்பு ஒரு புதிய எதிர்மறைகளை உறுப்புகளாய் கொண்ட ஒரு புதிய அமைப்புக்கு வழிவிடுகிறது. இங்கே பழைய நிகழ்ச்சிப் போக்கை அகற்றிவிட்டு புதிய நிகழ்ச்சிப் போக்கு தோன்றுகிறது. பழைய நிகழ்ச்சிப் போக்கு முடிவுற்று புதிய நிகழ்ச்சிப் போக்கு தொடங்குகின்றது. புதிய நிகழ்ச்சிப் போக்கு புதிய முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. இப்புதிய நிகழ்ச்சிப் போக்கிலும் முரண்பாடுகளின் வளர்ச்சி பற்றிய அதன் சொந்த வரலாறு தொடங்குகிறது"

— முரண்பாடு பற்றி (MSW 663 NBA )

எனவே சமுதாய வளர்ச்சியின் ஒரு நிகழ்ச்சிப் போக்கு என்பது ஒரு பழைய சமுதாய வளர்ச்சியினுடைய நிகழ்ச்சிப் போக்கின் முடிவில் அதை அகற்றிவிட்டு தோன்றுவதாகும். அதேபோல் ஒரு புதிய சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கின் தோற்றத்தால் அகற்றப்படுவதாகும்.

'இரண்டு அடிப்படை முரண்பாடுகள், எனவே இரண்டு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகள்' என்ற மா. அ. க. வினரின் கோட்பாட்டின்படி இரண்டு அடிப்படை முரண்பாடுகளின் தீர்வு இரண்டு புதிய சமுதாயங்களையோ, இரண்டு புதிய நிகழ்ச்சிப் போக்குகளையோ ஏற்படுத்துவதில்லை. இரண்டு அடிப்படை முரண்பாடுகளின் தீர்வும் இணைந்ததாகவும், அது புதிய ஜனநாயக சமுதாயம் என்ற ஒரே புதிய சமுதாயத்தையும், சோசலிசப் புரட்சி என்ற புதிய நிகழ்ச்சிப் போக்கையும் மட்டுமே உருவாக்குவதாயும் இருக்கின்றது.



மேலும் புதிய வகைப்பட்ட முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கைக் கொண்டிருக்கும் சமுதாயம் அதில் நிலவும் இரு அடிப்படை முரண்பாடுகளையும் சேர்த்தே எதிர்மறை உறுப்புக்களைக் கொண்ட அமைப்பாய் இருக்கிறது. புதிய வகைப்பட்ட முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கு முற்றுப்பெறும் போது அதன் எதிர்மறை உறுப்புகளால் அமைந்த இந்த சமுதாய அமைப்பு மறைந்து புதிய எதிர்மறை உறுப்புகளைக் கொண்ட புதிய அமைப்பு - புதிய ஜனநாயக அமைப்பு - தோன்றுகிறது. இங்கே சோசலிசப் புரட்சி என்ற சமுதாய நிகழ்ச்சிப் போக்கு அதற்கான முரண்பாடுகளுடன் தோன்றுகிறது.

எனவே மா. அ. க. வினர் கருதுவது போல் தேசியப்புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கு, ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கு என்று தனித்தனி நிகழ்ச்சிப் போக்குகள் எவையும் இல்லை. இவர்களால் கூறப்படும் இவ்விரு நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் அடிப்படையாய் இருக்கும் முரண்பாடுகள் (புதிய வகைப்பட்ட) முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற ஒரே நிகழ்ச்சிப் போக்குக்கு அடிப்படையாய் இருப்பவையாகும். முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற ஒரே நிகழ்ச்சிப் போக்கிற்குள் இந்த இரு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகள் இருப்பதாகக் கூறுவார்களானால் ஒரு நிகழ்ச்சிப் போக்கு என்பது பழைய நிகழ்ச்சிப் போக்கு ஒன்றின் மறைவினால் தோன்றி புதிய நிகழ்ச்சிப் போக்கு ஒன்றின் தோற்றத்தால் மறைகிறது என்ற மாவோவின் விளக்கத்திற்கு அது எதிரானதாகும். ஏனெனில் இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளின் மறைவில் ஒரே நிகழ்ச்சிப் போக்குதான் இங்கு தோன்றுகிறது.

மேலும் மாவோ கூறுகிறார் :

"ஒவ்வொரு இயக்க வடிவத்திலும் நிகழ்கிற உண்மையான (கற்பனையற்ற) ஒவ்வொரு வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கும் பண்பு வகையில் வேறுபட்டதாகும். முக்கியமாக நமது ஆய்வை இங்கிருந்துதான் தொடங்க வேண்டும்."

– முரண்பாடு பற்றி (MSW 666 NBA)

ஒவ்வொரு கற்பனையற்ற நிகழ்ச்சிப் போக்கும் பண்பு வகையில் வேறுபட்டதாகும். உதாரணமாக ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கும், சோசலிசப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கும் பண்பு வகையில் மாறுபட்டவையாகும். இவை இரண்டும் வெவ்வேறு

படிப்பகம்

www.padippkam.com



பண்பு வகையில் மாறுபட்ட சமுதாய அமைப்புகளைப் பெற்றிருக்கின்றன. ஆனால் மா. அ. க. வினர் கூறும் 'ஜனநாயகப் புரட்சி, தேசியப் புரட்சி' என்ற இரு நிகழ்ச்சிப் போக்குகளும் பண்பு வகையில் வேறுபட்டனவா? இல்லை. மாறாக இரண்டுமே ஒரே சமுதாயத்தில் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளன. இரண்டுக்குமே விவசாயப் புரட்சியே சாராம்சமாக உள்ளது. சரியாகச் சொன்னால் புதிய ஜனநாயகப் புரட்சி (என்ற நிகழ்ச்சிப் போக்கு) முடிவடையும் வரையிலும் முதன்மை முரண்பாடு எதுவாக இருப்பினும் புரட்சியின் சாராம்சம் விவசாயப் புரட்சியாகவே இருக்கிறது. எனவே மா. அ. க. வினரின் இரு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகளும் பண்பு வகையில் வேறுபட்டதாக இல்லை என்பதால் அவை உண்மையான நிகழ்ச்சிப் போக்குகளல்ல. மாறாக மா. அ. க. வினரின் கற்பனையில் உதித்த நிகழ்ச்சிப் போக்குகளாகும்.

இன்றைய சமுதாயத்தில் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சி என்ற உண்மையான ஒரே நிகழ்ச்சிப் போக்கு மட்டுமே நிலவுகிறது என்பதை மா.அ.கவினரின் கற்பனையான 'நிகழ்ச்சிப் போக்குகள்' மறுத்துவிடுகின்றன. மேலும், அவர்கள் கூறும் 'இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளும்' பண்பு வகையில் வேறுபட்டவை என அவர்கள் கூறுகின்றனர். புதிய ஜனநாயகப் புரட்சிக் காலகட்டம் முழுவதிலும் விவசாயப் புரட்சியே அதன் சாராம்சமாக இருக்கும் என்பதை மறுக்கின்றனர். இதன் மூலம் புதிய ஜனநாயகப் புரட்சியையே மறுக்கின்றனர்.

அவ்வாறின்றி முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கே ஒரு இயக்க வடிவம் (form of motion) என்றும் அதில் தேசியப் புரட்சி, ஜனநாயகப்புரட்சி என்ற இரண்டு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகள் இருப்பதாகவும் கூறுவார்களாயின் அது முன்னிலும் தவறானதாகவே இருக்கும். இயக்க வடிவம் என்பது முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய இயல்பாகும் (universality of contradiction). பல்வேறு இயக்க வடிவங்களில் வர்க்க சமுதாய இயக்க வடிவமும் ஒன்று. வர்க்க சமுதாயத்தின் அனைத்தும் தழுவிய முரண்பாடு உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடும், வர்க்கப் போராட்டம் மற்றும் அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடும் ஆகும். இந்த அனைத்தும் தழுவிய இயல்பு பெற்ற முரண்பாடு ஒவ்வொரு



குறிப்பிட்ட வர்க்க சமுதாயத்திலும் சிறப்பியல்பு பெற்ற முரண்பாடுகளாக வெளிப்பட்டு அதன் அடிப்படை முரண்பாடாக அமைகின்றன; சமுதாய நிகழ்ச்சிப் போக்கையும் அதன் சாராம்சத்தையும் தீர்மானிக்கின்றன.

எனவே, இயக்க வடிவத்திற்கும் அதன் நிகழ்ச்சிப் போக்கிற்கும் இடையிலான உறவு என்னவெனில் இயக்க வடிவம் என்பது முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய இயல்பையும் நிகழ்ச்சிப் போக்கு என்பது சிறப்பியல்பையும் குறிக்கிறது என்பதாகும். முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய இயல்புக்கும் முரண்பாட்டின் சிறப்பியல்புக்கும் இடையிலான உறவு என்னவெனில் முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய இயல்பு பொதுத்தன்மையையும் சிறப்பியல்பு தனித்தன்மையையும் குறிக்கிறது என்பதாகும்.

மாவோ கூறினார் :

> "முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய இயல்புக்கும் (Universality of contradiction) சிறப்பியல்புக்கும் (Particularity of contradiction) இடையில் உள்ள உறவு முரண்பாட்டின் பொதுத்தன்மைக்கும் (General character) தனித்தன்மைக்கும் (Individual character) இடையில் உள்ள உறவாகும். பொதுவான தன்மை என்று நாம் குறிப்பிடும்போது அனைத்து நிகழ்ச்சிப் போக்குகளிலும் ஆரம்பம் முதல் முடிவு வரை முரண்பாடு இருந்து வருகிறது. இயங்கி வருகிறது என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம்"

— முரண்பாடு பற்றி (MSW 674, NBA )

வர்க்க சமுதாய இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்பு பெற்ற முரண்பாடுகள் (உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு, வர்க்கப் போராட்டம், அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடு) இன்றைய சமுதாயத்தில் சிறப்பியல்பு பெற்ற முரண்பாடுகளாக வெளிப்படுகின்றன. முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கை இயக்க வடிவம் என்றும் இவ்விரு அடிப்படை முரண்பாடுகளை (நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாடு) அந்த 'இயக்க வடிவத்தின்' அனைத்தும் தழுவிய இயல்பு பெற்ற

www.padippkam.com



முரண்பாடு என்றும் கூறுவார்களானால் (இது அபத்தமானது என்பதில் சந்தேகமில்லை) அந்த இயக்க வடிவத்திற்குள் அவர்களால் படைக்கப்பட்ட "தேசியப் புரட்சி" "ஜனநாயகப் புரட்சி" என்ற இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளுக்கு அடிப்படையாய் இருக்கும் முரண்பாடுகள் மேற்கண்ட அனைத்தும் தழுவிய இயல்பு பெற்ற முரண்பாடுகளின் சிறப்பியல்பு பெற்ற முரண்பாடுகளாய் இருக்க வேண்டும். ஆனால், மா. அ. க. வினர் கூறும் இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கின் இரு அடிப்படை முரண்பாடுகளையே அப்படியே திரும்பவும் (ஆனால் பிரித்து) கூறுகின்றனர். இதில் இயக்க வடிவத்திற்கும் அதன் நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் உள்ள உறவோ, முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய இயல்புக்கும் சிறப்பியல்புக்கும் உள்ள உறவோ, பொதுத் தன்மைக்கும் தனித் தன்மைக்கும் உள்ள உறவோ எதுவும் இல்லை.

இன்னொரு விதமாக 'தேசியப் புரட்சி' 'ஜனநாயகப் புரட்சி' என்ற இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளும் முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற இயக்க வடிவத்திற்கு அல்லது நிகழ்ச்சிப் போக்கிற்கு உள்ளாக இல்லை. மாறாக வர்க்க சமுதாய இயக்க வடிவத்தின் இரு நிகழ்ச்சிப் போக்குகளாகவே இருக்கின்றன என்று கூறுவார்களாயின் இந்திய சமுதாயம் ஒரு சமுதாயமாக அல்ல இரு சமுதாயமாக இருப்பதாகக் கூறுகின்றவர்கள் ஆவார்கள். இதைவிட அபத்தமானது வேறொன்று இருக்க முடியாது.

மா. அ. க. வினரின் கற்பனையான 'இரு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகளால்' இத்தகைய மார்க்சிய விரோத விநோத முடிவுகளுக்கு மட்டுமே வரமுடியும்.

கற்பனையற்ற, உண்மையான நிகழ்ச்சிப் போக்குகளிலிருந்து ஆய்வைத் தொடங்க வேண்டும் என்று மார்க்சிய ஆசான்கள் கற்பிப்பதற்கு மாறாக மா. அ. க. வினர் கற்பனையான நிகழ்ச்சிப் போக்குகளைப் படைத்து முரண்பாடுகளை ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளனர்.

எனவே மா. அ. க. வினரின் இரு சமுதாய நிகழ்ச்சிப் போக்கு என்ற கோட்பாடு கீழ்க் கண்ட காரணங்களால் மார்க்சிய விரோதமானதாகும் என்ற முடிவுக்கு வர முடியும்.



1. ஒவ்வொரு சமுதாயமும் அதற்கு அடுத்த மட்ட உயர்ந்த சமுதாயமாக மாறுவதற்கான ஒரே நிகழ்ச்சிப் போக்கை மட்டுமே கொண்டிருக்க முடியும் என்பதை இது மறுக்கிறது.

2. ஒவ்வொரு சமுதாய நிகழ்ச்சிப் போக்கும் அதற்கு முந்திய நிகழ்ச்சிப் போக்கினை அகற்றிவிட்டு அந்த இடத்தில் தோன்றியது என்பதையும், புதிய நிகழ்ச்சிப் போக்கு ஒன்றால் அகற்றப்படக் கூடியது என்பதையும் இது மறுக்கிறது.

3. ஒவ்வொரு சமுதாய நிகழ்ச்சிப் போக்கும் பண்பு வகையில் வேறுபட்டது என்பதால் ஒரு நிகழ்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாடுகள் பிற நிகழ்ச்சிப் போக்குகளின் அடிப்படை முரண்பாடாய் இருக்க முடியாது என்பதையும் மறுக்கிறது.

4. (புதிய வகைப்பட்ட) முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற (கற்பனையற்ற) உண்மையான நிகழ்ச்சிப் போக்கின் இரண்டு அடிப்படை முரண்பாடுகளுக்கு கற்பனையான இரண்டு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகளை இது கற்பிக்கிறது.

படிப்பகம்

www.padippkam.com

2

# கோமிண்டாங் பிற்போக்குக் கும்பலின் “இரு கட்டப் புரட்சி கோட்பாட்டின்” போதகர்களாகிறார்கள் மா. அ. க. வினர்

இன்றைய சமுதாயத்தின் (புதிய வகைப்பட்ட) முதலாளிய புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்குக்குள்ளாகவே நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்படும் ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்படும் தேசியப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கும் இருப்பதாக கூறும் மா. அ. க. வினர் இவ்விரு நிகழ்ச்சிப் போக்குகளும் கற்பனையானவையல்ல உண்மையானவை என்று கூறுவதற்காக இவ்விரு நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் இடையே பண்பு வகையான வேறுபாடு இருப்பதாகக் கூறுகிறார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள் :

> "ஜனநாயகப் புரட்சி விவசாயிகளின் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்டது. தேசியப் புரட்சி விவசாயச் சீர்திருத்தத்தை மட்டுமே உள்ளடக்கியது. எவ்வாறாயினும் இரண்டுமே விவசாயிகளின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஆனால், பண்பு வகையில் வேறான தன்மையுடன்."
>
> (மா. அ. க. பக். 42)



விவசாயப் புரட்சி என்பது "முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கமும் அடிப்படையும் ஆகும்" என்றார் ஸ்டாலின் ('சீனப் புரட்சி பற்றி' என்ற கட்டுரையில்). எனவே, விவசாயப் புரட்சியைக் கைவிடுவது என்பது ஜனநாயகப் புரட்சியையே கைவிடுவதாகும். தேசியப் புரட்சியின் போது மா. அ. க. வினர் விவசாயச் சீர்திருத்தம் மட்டுமே இருக்கும், அதுவும் பண்பு வகையான வேறுபாடு கொண்டது, அதாவது விவசாயப் புரட்சியின் புரட்சிகர குணாம்சம் இல்லாதது என்பதால் தேசியப் புரட்சியின்போது ஜனநாயகப் புரட்சியின் சாராம்சம் இல்லை. எனவே, இவர்களுடைய கருத்துப்படி ஏதேனும் ஒரு ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தால் அல்லது காலனியாகவோ நவீனக் காலனியாகவோ மாற்றினால் அப்போது புரட்சியின் சாராம்சத்தில் விவசாயப் புரட்சி இருக்காது. விவசாயச் சீர்திருத்தம் மட்டுமே இருக்கும்.

ஆனால், மாவோ இதற்கு எதிராகக் கூறுகிறார். சீனத்தை தமது முழுக்காலனியாக்கும் நோக்கத்துடன் ஜப்பான் சீனத்தின் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்து பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு வந்தபோது ஜனநாயகமற்ற தேசியப் புரட்சி பற்றிய கொள்கையை அவர் எதிர்த்தார்.

அவர் கூறினார்:

> "உள்நாட்டு சமாதானமின்றி ஒரு உண்மையான, ஸ்திரமான ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி அமைக்கப்பட முடியாதது போலவே உள்நாட்டில் ஜனநாயகமின்றியும் அது அமைக்கப்பட முடியாதது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, தற்போதைய வளர்ச்சிக் கட்டத்தில் ஜனநாயகத்திற்காகப் போராடுவதே புரட்சிகர கடமையின் கேந்திர தொட்ராகும். ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை தெளிவாகக் காணத் தவறி அதற்காகப் போராடுவதை தளர்த்துவோமானால் நாம் ஒரு உண்மையான, ஸ்திரமான ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியை அமைக்க முடியாதவராவோம்"..... "தேசிய பாதுகாப்புக்கான அரசியல், ராணுவப் பொருளாதாரக் கல்வி தயாரிப்புகள் அனைத்தும் நாட்டைக் காப்பதற்கான ஆயுத எதிர்ப்பிற்கு அவசியமானவை. இவற்றில் எதையும் ஒரு கணமேனும் தாமதிக்க விடக்கூடாது. ஆனால், எமது ஆயுத எதிர்ப்பிற்கு வெற்றியை உத்திரவாதம் செய்யும் முக்கியத் தொடர் அரசியல்

படிப்பகம்

www.padippkam.com



ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் வென்றெடுப்பதாகும். ஆயுத எதிர்ப்பிற்கு உள்நாட்டு சமாதானமும் ஐக்கியமும் தேவைப்படுகிறது. ஆனால் ஜனநாயகமும் சுதந்திரமும் இன்றி ஏற்கெனவே வென்றெடுக்கப்பட்ட சமாதானம் ஸ்திரப்படவும், உள் ஐக்கியம் பலப்படுத்தப்படவும் முடியாது. ஆயுத எதிர்ப்பிற்கு மக்களை அணிதிரட்டுவது தேவைப்படுகிறது. ஆனால் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் தவிர அவர்களை அணிதிரட்டுவதற்கு வேறு வழியே இல்லை"

—ஜப்பானிய எதிர்ப்பு காலகட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடமைகள்

மேலும் மாவோ கூறுகிறார் :

"ஜப்பானுக்கெதிரான போராட்டமனைத்தும் நல்வாழ்வுக்கான மக்கள் போராட்டமனைத்தும் ஜனநாயகத்துக்கான இயக்கத்துடன் இணைந்திருக்க வேண்டும் என்பது தவறற்றதும் மறுக்க முடியாததும் ஆகும். தற்போதைய கட்டத்தின் மையமான அத்தியாவசியமான விசயம் ஜனநாயகமும் சுதந்திரமும் ஆகும்."

—ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணிக்கு கோடிக்கணக்கில் பொதுமக்களை வென்றெடுங்கள்

ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் முற்றாக வீழ்த்தும், அதாவது ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும், நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டையும் தீர்க்கும் புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றி பெறும்வரை நிலவும் முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்குக்கு சாராம்சமாக இருப்பது விவசாயப் புரட்சியே. ஏகாதிபத்தியம் முதன்மை எதிரியாக இருக்கும்போது புரட்சி விவசாயச் சீர்திருத்தத்தை மட்டுமே உள்ளடக்கி இருக்கும் என்றும் அது விவசாயப் புரட்சியிலிருந்து பண்பு வகையில் வேறுபட்டது என்றும் கூறுவது அப்போது புதிய ஜனநாயகப் புரட்சியையே கைவிடுவதாகும். முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் அடிப்படையாகவும் உள்ளடக்கமாகவும் இருப்பது விவசாயப் புரட்சியே என்று தோழர் ஸ்டாலின் கூறுவதை மறுப்பதாகும்.

இதன் மூலம் ஒரு நிகழ்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாடும் அந்த அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்பட்ட



அதன் சாராம்சமும் அந்த நிகழ்ச்சிப் போக்கு மறையும்வரை மறையாது என்று மாவோ சொன்னதற்கு எதிராக புதிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கு முடிவுபெறும் முன்பே அதன் சாராம்சமாக இருக்கும் விவசாயப் புரட்சி மறையும் என்கிறார்கள். மா. அ. க. வினரின் இந்த தவறுக்கு அடிப்படை என்ன? ஏகாதிபத்தியம் முதன்மை எதிரியாக மாறும்போது ஏகாதிபத்திய எதிர்ப்பில் அதிகபட்ச சக்திகளைத் திரட்டுவதற்காக நிலப்பிரபுக்களின் நிலம் வலிந்து கைப்பற்றப்படுவது நிறுத்தப்பட்டிருக்கும். நில வாடகை குறைப்பு, வட்டி குறைப்பு போன்ற கொள்கைகள் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும். இதற்கு அர்த்தம் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கை கைவிடப்பட்டுவிட்டது என்பதல்ல, அதை நிறைவேற்றுவதற்கான வழிமுறை தகுந்த மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படுகிறது என்பதேயாகும். விவசாயப் புரட்சி என்பது நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்ற முழக்கத்தை மட்டுமல்ல அதிகாரம் (கிராமப்புறங்களில்) விவசாயிகளுக்குச் சொந்தம் என்ற முழக்கத்தையும் கொண்டதாகும். விவசாயிகளின் ஆயுதமேந்தும் உரிமையும் அரசியல் அதிகாரமும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பால் கைவிடப்படுவதில்லை. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்திற்கும் உடைமைக்கும் கூட எதிரானது என்பதால் குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான முரண்பாடு கூட கூர்மையடைய வாய்ப்புள்ளது. இதைப் பயன்படுத்திக்கொண்டு அதிகபட்ச மக்கள் ஜனநாயகம் பெறவும் – அதிகாரமும், ஆயுதமேந்தும் உரிமையும் பெறவும் – அதன் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரை புதிய ஜனநாயகப் புரட்சியின் இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்லவுமான ஒரு வழிமுறையாகவே உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையை வலிந்து நிறைவேற்றுவது நிறுத்தப்பட்டு தகுந்த வழிமுறைகள் மூலம் மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின்போது நிலப்பிரச்சினை பற்றி மாவோ எழுதியது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

அவர் எழுதினார் :

"சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிலப்பிரபுக்களின் நிலத்தை வலிந்து பறிக்கும் கொள்கையை அமுல் நடத்துவதை நிறுத்தவும் புதிய ஜனநாயகக் குடியரசு அமைக்கும் போக்கில் சட்டம் முதலான தகுந்த வழிமுறைகள் மூலம் நிலப்பிரச்சினையைத் தீர்க்கவும் தயாராக இருக்கிறது. முதலில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை சீனாவின் நிலம் ஜப்பானுக்குச் சொந்தமாய் இருக்குமா, சீனருக்குச்

படிப்பகம்

www.padippkam.com



சொந்தமாய் இருக்குமா என்பதேயாகும். சீனாவைப் பாதுகாத்தால் தான் விவசாயிகளின் நிலப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமாதலால் நாம் வலிந்து பறிமுதல் செய்யும் முறையைக் கைவிட்டு தகுந்த புதிய வழிமுறைகளுக்குச் செல்வது முற்றிலும் அவசியமானது."

—ஜப்பானிய எதிர்ப்புக் காலகட்டத்தில்
சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடமைகள்

ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி விவசாயப் புரட்சியைக் கைவிடவில்லை. உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையையும் கைவிடவில்லை. அதை நிறைவேற்றும் வழிமுறைகளை மட்டுமே மாற்றியது. ஆனால், உழுபவனுக்கு நிலம் என்ற கொள்கையை நிலப்பிரபுக்களின் நிலத்தை வலிந்து கைப்பற்றுவதன் மூலம் நிறைவேற்றினால் மட்டுமே விவசாயப்புரட்சி என்று மா. அ. க. வினர் கருதுகின்றனர். விவசாயிகளின் அதிகாரம் பற்றிய பிரச்சினையையும், விவசாயப் புரட்சியில் மேற்கொள்ள வேண்டிய புரட்சிகர செயலுத்திகள் பற்றியும் இவர்கள் புரிந்துகொள்ளவில்லை. இதனால், ஏகாதிபத்திய எதிர்ப்பு பிரதானமாய் இருக்கும் காலத்தில் வைக்கப்படும் குறிப்பான திட்டத்தை (Specific Programme) புரட்சிகர செயலுத்திக்கும் சீர்திருத்தத்திற்கும் உள்ள வேறுபாடு தெரியாமல் சீர்திருத்தம் என்கின்றனர்.

எனவே, விவசாயிகளின் அரசியல் அதிகாரம் மற்றும் விவசாயப் புரட்சியின் புரட்சிகர செயலுத்தி ஆகியவற்றைக் கைவிட்டு நிலப்பிரபுவின் நிலத்தை வலிந்து கைப்பற்றுவது மட்டுமே விவசாயப் புரட்சி எனக்கருதும் மா. அ. க. வினரின் கருத்தில் தங்கியிருப்பது மார்க்சியமல்ல மாறாக முரட்டுப் பொருளாதாரவாதமே (Militant Economism) என்பதில் ஐயமில்லை.

ஏகாதிபத்திய எதிர்ப்பு பிரதானமாகும்போது உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையை நிறைவேற்றுவதற்கான வழிமுறை மாற்றியமைக்கப்படுவதைத்தான் மா. அ. க. வினர் விவசாயச் சீர்திருத்தம் என்கின்றனர். விவசாயப் புரட்சியிலிருந்து பண்பு வகையில் வேறுபட்டது என்கின்றனர். விவசாயப் புரட்சியின் புரட்சிகர செயலுத்தியை விவசாயப் புரட்சியிலிருந்து பிரித்து பண்பு வகையில் வேறுபட்ட சீர்திருத்தம் என்கின்றனர். ஜனநாயகப் புரட்சி என்பது பல கட்டங்களின் ஊடாகவே சோசலிசத்தை நோக்கி வளருகிறது என்பதை இவர்கள் அறியவில்லை.



மாவோ கூறினார் :

"நாம் சோசலிசத் திசையில் ஜனநாயகப் புரட்சி செல்வதை ஆதரிப்பவர்கள். ஜனநாயகப் புரட்சி ஒரு ஜனநாயகக் குடியரசு கோஷத்தின் கீழ் உள்ள பல கட்டங்களின் **ஊடாகத்தான்** வளரும். முதலாளி வர்க்க ஆதிக்கம் பாட்டாளி வர்க்க **ஆதிக்கமாவது ஒரு** நீண்ட போராட்டப் போக்காக தலைமை அதிகாரத்திற்கான போராட்டப் போக்காக இருக்கும். இதில் வெற்றி பெறுவது என்பது கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்கத்தினதும் விவசாயி, நகர்ப்புறக் குட்டி முதலாளி வர்க்கங்களினதும் அரசியல் உணர்வு, அமைப்பு நிலை ஆகியவற்றின் மட்டத்தை உயர்த்தச் செய்யும் வேலையிலேயே தங்கியிருக்கிறது"

—ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணிக்காக
கோடிக்கணக்கில் பொதுமக்களை வென்றெடுங்கள்.

விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சி பல இடைக் கட்டங்களைக் (phase or substage) கொண்டதாக இருப்பினும் அதன் விவசாயப் புரட்சி சாராம்சம் நீங்குவதில்லை. ஆனால், நீண்ட நெடிய காலம் நடக்கும் புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டத்திற்குள் நிலைமைகள் மாறுவதற்கேற்ப ஏற்படும் இடைக் கட்டங்களில் குறிப்பான திட்டங்கள் முன் வைக்கப்படுவது புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கே. உதாரணமாக, சீனத்தில் முதலாளிய ஜனநாயகப் புரட்சி முழுவதும் புதிய ஜனநாயகத்திற்கான பொதுத்திட்டம் மாறாமல் இருந்ததையும் ஆனால், நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கேற்ப அவ்விடைக் கட்டங்களில் புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டத்திற்குள்ளாகவே குறிப்பான திட்டங்கள் வைக்கப்பட்டதையும் மாவோ கூறுகிறார் :

"புதிய ஜனநாயகம் என்ற நமது பொதுத்திட்டம் (General programme) முதலாளிய ஜனநாயகப் புரட்சிக் கட்டம் முழுவதும் தொடர்ந்து பல பத்தாண்டுகளுக்கு மாறாது. ஆனால் இக்கட்டத்திற்குள்ளேயே ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் நிலைமைகள் மாறின. மாறிக்கொண்டிருக்கின்றன. எனவே, அவற்றிற்கேற்ப இயல்பாகவே நமது குறிப்பான திட்டங்களை மாற்றி இருக்கிறோம். உதாரணமாக நமது பொதுத் திட்டமான புதிய ஜனநாயகம், வடக்குப் படையெடுப்பு, விவசாயப் புரட்சி யுத்தம்,

படிப்பகம்

www.padippkam.com



ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் ஆகிய காலகட்டங்கள் அனைத்திலும் மாறாதிருக்கிறது. ஆனால், நமது குறிப்பான திட்டங்கள் (Specific programme) மாறியிருக்கின்றன. ஏனெனில் நமது நண்பர்களும், எதிரிகளும் தொடர்ந்து அதே நிலையில் இல்லை."

—கூட்டரசாங்கம் பற்றி (MSW 267 NBA)

எனவே, (புதிய வகைப்பட்ட) முதலாளிய ஜனநாயகத்தின் இறுதி வெற்றிக்காக அவற்றின் இடைக் கட்டங்களில் வைக்கப்படும் திட்டங்களை மா. அ. க. வினர் சீர்திருத்தம் என்றும் அவை பண்பு வகையில் வேறுபட்டது என்றும் (ஏகாதிபத்திய எதிர்ப்பு பிரதானமாகும் காலத்தில் வைக்கப்படும் விவசாயத் திட்டத்தை சீர்திருத்தம் என்றும் ) தொடர்ந்து கூறுவார்களானால் அவ்விடைக் கட்டம் முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் இடைக் கட்டம் என்பதையும் அப்போது விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சித் திட்டம் அமலில் இருப்பதையும் மறுப்பவர்களாகி முதலாளித்துவ சீர்திருத்தவாதிகளாகவே வெளிப்படுவார்கள். உண்மையில் அவ்வாறுதான் வெளிப்படுகிறார்கள். புரட்சியின் இடைக் கட்டம் தேசியப் புரட்சியை அல்லது விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்டிருக்க வேண்டும் (மா.அ.க பக். 19) என்கிறார்கள். அதாவது ஏகாதிபத்திய எதிர்ப்பு பிரதானமாய் இருக்கும்போது அதன் சாராம்சமாய் விவசாயப் புரட்சி இருக்காது என்கின்றனர். இதன் பொருள் அப்போது புரட்சியின் கட்டம் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக் கட்டமாய் இருக்காது என்பதேயாகும். இதனால் சீனத்தில் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின்போது கோமிண்டாங் பிற்போக்குக் கும்பல் போதித்த 'இரு கட்டப் புரட்சிக் கோட்பாட்டின்' (தேசியப் புரட்சி, ஜனநாயகப் புரட்சி என்ற இரு கட்டப் புரட்சி பற்றிய கோட்பாடு) இந்திய போதகர்களாக வெளிப்படுகின்றனர்.

கோமிண்டாங் பிற்போக்குக் கும்பலின் 'இரு கட்டப் புரட்சி கோட்பாடு'பற்றி மாவோ. கூறினார்:

"ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் போது இரு கட்டப் புரட்சி பற்றிய கோட்பாடு - "தேசியப்புரட்சி" என்ற ஒரு கட்டம் "ஜனநாயகத்திற்கும் மக்கள் நல்வாழ்விற்குமான புரட்சி" என்று இன்னொரு கட்டம் - தோன்றியுள்ளது. இந்தக் கோட்பாடு தவறானதாகும்."



"கொடூரமான எதிரியை எதிர்ப்பதற்காக, ஜனநாயக சீர்திருத்தங்கள் அல்லது மக்கள் நல்வாழ்வு பற்றிய பிரச்சினையை நாம் எழுப்பக் கூடாது. ஜப்பான் விரட்டப்படும் வரை அதற்காகக் காத்திருக்க வேண்டும்" என்ற நகைப்புக்கிடமான கோட்பாட்டை கோமிண்டாங் பிற்போக்குக் கும்பல் யுத்தத்தின் இறுதி வெற்றியைத் தடுப்பதற்காக முன் வைக்கிறது"

—கூட்டரசாங்கம் பற்றி (MSW 279 NBA)

ஏகாதிபத்திய எதிர்ப்பு பிரதானமாய் இருக்கும் போது விவசாயப் புரட்சியிலிருந்து பண்பு வகையில் வேறுபட்ட விவசாயச் சீர்திருத்தமே புரட்சியின் சாராம்சமாக இருக்கிறது என்பது கோமிண்டாங் பிற்போக்குக் கும்பலின் இரு கட்டப் புரட்சி கோட்பாடேயாகும். ஏனெனில் ஏகாதிபத்திய எதிர்ப்பு பிரதானமாய் இருக்கும் போது தேசியப் புரட்சியை முடித்துவிட்டு பின்னர் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட ஜனநாயகப் புரட்சியை முடிக்க வேண்டும் என்பதன் மூலம் புதிய ஜனநாயகப் புரட்சிக் கால கட்டம் முழுவதும்-ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவமும் முற்றாகத் தூக்கி எறியப்பட்டு மக்கள் ஜனநாயக அரசு அமைக்கப்படும் வரையிலும் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட முதலாளிய ஜனநாயகப் புரட்சிக் கட்டமே என்பதை மறுத்து விடுகின்றனர். புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டமில்லாத மற்றொரு கட்டத்தைப் படைத்து கோமிண்டாங் பிற்போக்குக் கும்பலின் 'இரு கட்டப் புரட்சிக் கோட்பாட்டிற்கு' போதகர்களாகின்றனர்.

எனவே மா. அ. க. வினர் தேசியப் புரட்சி, ஜனநாயகப் புரட்சி என்ற இரண்டு நிகழ்ச்சிப் போக்குகள் இருப்பதாகவும் அவை பண்பு வகையில் வேறுபட்டவை என்றும் காட்டுவதற்கு செய்யும் முயற்சிகள் அவர்களை கோமிண்டாங் பிற்போக்குக் கும்பலுடன் சேர்த்து இனங்காட்டிக் கொள்ளப் பயன்படுகிறதேயன்றி மார்க்சியவாதிகளுடன் அவர்களை இனங்காட்டிக் கொள்ளப் பயன்படவில்லை.

படிப்பகம்

www.padippkam.com

# 3

# ஒரு சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கும் புரட்சியின் இடைக் கட்டமும் – மா. அ. க. வினர் குழப்பம்

சமுதாயத்தில் நிலவும் பல்வேறு முரண்பாடுகளில் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாடு ஆகிய இந்த இரண்டும் அடிப்படை முரண்பாடுகளாக இருக்கின்றன. முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கும் அதன் சாராம்சமும் இம்முரண்பாடுகளாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. இது புரட்சி ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தில் இருப்பதைக் குறிக்கிறது. இம்முரண்பாடுகள் தீர்க்கப்படும்போது முதலாளிய ஜனநாயகப்புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கு முற்றுப்பெற்று புதிய ஜனநாயக சமுதாயம் தோன்றும். இத்துடன் ஜனநாயகப் புரட்சிக் கட்டமும் முற்றுப்பெறும். சோசலிசப் புரட்சி என்ற புதிய நிகழ்ச்சிப் போக்கு தோன்றும். எனினும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கு மிக நீண்டதாய் இருப்பதால் அதன் அடிப்படை முரண்பாடுகளின் இயல்பும் நிகழ்ச்சிப் போக்கின் சாராம்சமும் மாறாமல் இருக்கும்போதே அடிப்படை முரண்பாடுகள் மேலும் மேலும் தீவிரமடைவதும் இதனால் அடிப்படை முரண்பாடுகளால் செல்வாக்கு செலுத்தப்படுகின்ற அல்லது தீர்மானிக்கப்படுகின்ற சிறிய, பெரிய முரண்பாடுகளில் சில தீவிரமடைவதும், சில தற்காலிகமாகத் தீர்வதும் அல்லது பகுதியாகத் தீர்வதும் அல்லது மந்தமடைவதும் சில புதிய முரண்பாடுகள்



தோன்றுவதும் நடக்கின்றது. இதனால் முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கு பல இடைக் கட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது.

மாவோ கூறினார் :

"ஒரு பொருளினுடைய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கில் உள்ள அடிப்படை முரண்பாட்டின் இயல்பும் அந்த நிகழ்ச்சிப் போக்கின் சாராம்சமும் மாறாமல் இருக்கும்போதே இந்த நீண்ட நிகழ்ச்சிப் போக்கில் அடிப்படை முரண்பாடு ஒரு கட்டத்தில் இருந்து மற்றொரு கட்டத்திற்கு மேலும் மேலும் தீவிரமடைகிறது. கூடவே அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்படுகின்ற அல்லது செல்வாக்கு செலுத்தப் படுகின்ற சிறிய, பெரிய முரண்பாடுகளில் சில தீவிரமடைகின்றன. சில தற்காலிகமாகவோ, பகுதியாகவோ தீர்கின்றன; அல்லது மந்தமடைகின்றன; சில புதிய முரண்பாடுகள் தோன்றுகின்றன. எனவே அந்த நிகழ்ச்சிப் போக்கு பல கட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது. ஒரு பொருளினுடைய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கில் எழும் கட்டங்கள் பற்றி கவனம் செலுத்தாதோரால் அதன் முரண்பாடுகளை சரியாகக் கையாள முடியாது."

–முரண்பாடு பற்றி (MSW 669 NBA)

அதாவது ஒரு சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கு என்பது புரட்சியின் கட்டத்தை (ஜனநாயகம் அல்லது சோசலிசம்) தீர்மானிப்பதாக இருக்கிறது. ஆனால், அந்நிகழ்ச்சிப் போக்கு நீண்டதாக இருக்கும் போது அதுவே பல்வேறு கட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது என்பதையே மேற்கோள் தெளிவு படுத்துகிறது. ஆனால் இக்கட்டங்களில் அடிப்படை முரண்பாடும் அதனால் தீர்மானிக்கப் படுகின்ற சாராம்சமும் மாறுவதில்லை. அதனால் (ஜனநாயகம் அல்லது சோசலிசம் போன்ற) புரட்சியின் கட்டமும் மாற்றமடைவதில்லை. எனவே அந்த நிகழ்ச்சிப் போக்கின் இடையில் தோன்றும் இக்கட்டங்கள் பலவும் இடைக் கட்டங்கள் (phase) அல்லது துணைக் கட்டங்கள் (substage) எனப்படுகின்றன.

இதை மாவோவின் கீழ்க் கண்ட மேற்கோள் மேலும் தெளிவுபடுத்தும் :

"பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கி வழி நடத்தப்படும் புதிய வகைப்பட்ட புரட்சியின் நோக்கம் அதன் முதல் கட்டத்தில் புதிய ஜனநாயக சமுதாயத்தையும் அனைத்துப் புரட்சிகர

www.padippkam.com



வர்க்கங்களின் கூட்டு சர்வாதிகாரத்தையும் நிறுவுவதாகும். இந்தப் புரட்சி உண்மையில் சோசலிசத்திற்கான பாதையை விரிவுபடுத்துவதற்கு உண்மையிலேயே சேவை செய்கிறது. இந்த புரட்சியின் வளர்ச்சிக் காலத்தில், எதிரிகளின் நிலைமைகளிலும் நமது நட்பு சக்திகளின் நிலைமைகளிலும் ஏற்படும் மாறுபாடுகள் காரணமாக இன்னும் பல துணைக் கட்டங்கள் (sub stage) ஏற்படலாம். ஆனால், இப்புரட்சியின் அடிப்படையான குணாம்சத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது. சோசலிசப் புரட்சி ஏற்படும் வரையில் இந்த குணாம்சம் ஒன்றாகவே இருக்கும்."

—புதிய ஜனநாயகம் (MSW 669 NBA)

எனவே, முதலாளிய ஜனநாயகப் புரட்சி எனும் நிகழ்ச்சிப் போக்கும் அதன் சாராம்சமும் மாறாமல் இருக்கும்போதே புரட்சி, எதிர்ப்புரட்சி சக்திகளிடையே ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப புரட்சியின் கட்டம் பல இடை அல்லது துணைக் கட்டங்களால் பிரிக்கப்படும் என்பது தெளிவு. இதுதான் மார்க்சிய அணுகுமுறை. சீனத்தில் புதிய ஜனநாயகப் புரட்சி வரை நிலவிய முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கைப்பற்றி மாவோ குறிப்பிடுவது இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

அவர் கூறுகிறார் :

"1911ஆம் ஆண்டு புரட்சியுடன் தொடங்கிய சீனாவின் முதலாளிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கை எடுத்துக் கொண்டால் அது பல்வேறுபட்ட கட்டங்களைக் கொண்டதாய் இருக்கிறது. குறிப்பாக முதலாளிகள் தலைமையிலான புரட்சிக் காலம் என்றும் பாட்டாளிகளின் தலைமையிலான புரட்சிக் காலம் என்றும் மிகவும் வேறுபட்ட இரு வரலாற்றுக் கட்டங்களைக் கொண்டிருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் பாட்டாளி வர்க்கத் தலைமை புரட்சியின் முழு முகத்தையும் அடிப்படையிலேயே மாற்றிவிட்டது. அது வர்க்கங்களிடையே புதிய கூட்டைக் கொண்டுவந்தது; விவசாயிகள் புரட்சியில் மாபெரும் எழுச்சிகளை ஏற்படுத்தியது; ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்து நடந்த புரட்சியைப் பூரணப்படுத்தியது; முதலாளிய ஜனநாயகப் புரட்சியிலிருந்து சோசலிசப் புரட்சிக்கு மாறுவதற்கான சாத்தியப்பாட்டை உருவாக்கியது; இப்படி பல முதலாளிகள் தலைமையில் புரட்சி நடந்த காலத்தில் இவற்றில் எதுவுமே சாத்தியமாகவில்லை. இது நிகழ்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாட்டின் இயல்பில் (ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சித் தன்மை, இதற்கு எதிரானது அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவத் தன்மை) எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. எனினும் இந்த நிகழ்ச்சிப் போக்கின் கடந்த இருபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளில் அது பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களாக கடந்து வந்துள்ளது" என்று கூறும் மாவோ 1911ஆம் ஆண்டு புரட்சி, வடக்குப் படையெடுப்பு (1924-27), விவசாயப் புரட்சி யுத்தம் (1927-1931) மற்றும் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் ஆகிய கால கட்டங்களை முக்கியமானதாக குறிப்பிடுகிறார்.

—முரண்பாடு பற்றி (MSW 669-70 NBA)



எனவே, சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கில் பல இடைக் கட்டங்கள் ஏற்படலாம். அந்த இடைக் கட்டங்கள் பற்றி கம்யூனிஸ்டுகள் கவனம் செலுத்துவது முரண்பாடுகளை சரியாகக் கையாள்வதற்கு அவசியம் என்பது தெளிவு. ஆனால், ஒரு நிகழ்ச்சிப் போக்கில் பல இடைக் கட்டங்கள் ஏற்படும் என்பதற்கு பதிலாக மா. அ. க. வினர் இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளில் பிரதானமான நிகழ்ச்சிப் போக்கை வைத்தே இடைக் கட்டத்தை தீர்மானிக்க வேண்டும் என்கின்றனர்.

அவர்கள் கூறுகின்றனர் :

"இந்த இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளில் எந்த நிகழ்ச்சிப் போக்கு குறிப்பிட்ட இடைக் கட்டத்தில் முதன்மைப் பாத்திரம் வகிக்கிறது என்று தீர்மானித்து......" (மா. அ. க. பக். 37)

இவர்களுடைய கருத்துப்படி ஒரு நிகழ்ச்சிப் போக்கில் பல்வேறு இடைக் கட்டங்கள் உருவாவதில்லை. மாறாக நிகழ்ச்சிப் போக்குகளில் பிரதானமான நிகழ்ச்சிப் போக்கு மாறும்போது இடைக் கட்டங்கள் தோன்றுகின்றன. ஒரு "பொருளினுடைய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கில் எழும் கட்டங்கள் பற்றி கவனம்" செலுத்தும்படி கூறினார் மாவோ. ஆனால் மா. அ. க. வினர் நிகழ்ச்சிப் போக்குகள் மாறுவதில் ஏற்படும் கட்டங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் புதிய கோட்பாட்டை முன் வைக்கின்றனர். மா. அ. க. வினர் கற்பனையில் பிறந்த நிகழ்ச்சிப் போக்குகளின் விளைவே இந்தக் கோட்பாடு. இதனால் மேலும் குழம்பிப் போய் ஒரு இடத்தில் (பக்கம் -37)

"...... இந்த இரண்டு போக்குகளில் எந்த நிகழ்ச்சிப் போக்கு குறிப்பிட்ட இடைக் கட்டங்களில் முதன்மைப் பாத்திரம் வகிக்கிறது

படிப்பகம்

www.padippkam.com



என்று தீர்மானித்து அதனடிப்படையில் முதன்மை முரண்பாடாக அந்த நிகழ்ச்சிப் போக்கிற்குக் காரணமான முரண்பாட்டைக் கொள்ள வேண்டும்" என்று கூறும் மா. அ. க. வினர் இன்னொரு இடத்தில் (பக். 4)

"புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் எந்த ஒரு இடைக் கட்டத்திலும் (phase) புரட்சியின் பாதையையும் அதன் இறுதி வெற்றியையும் உறுதிப்படுத்துவதற்கு முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிப்பது ஒரு அடிப்படையான தேவையாகும்" என்கின்றனர்.

முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிக்க எந்த நிகழ்ச்சிப் போக்கு பிரதானமானதாய் இருக்கிறது என்று பார்த்து அதற்கு அடிப்படையாய் இருக்கும் முரண்பாட்டைக் கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டு ஒரு நிகழ்ச்சிப் போக்கின் இடைக் கட்டத்தில் முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிக்க வேண்டும் என்று இன்னொரு இடத்தில் கூறுகின்றனர்.

இன்றைய இடைக் கட்டத்தின் முதன்மை முரண்பாடு நிலப்பிரபுத்துவத்திற்கும், மக்களுக்கும் இடையிலானது என்று மா. அ. க. வினர் கூறுகின்றனர். ஆனால் இது நிகழ்ச்சிப் போக்கின் (process of development of a society) இடைக் கட்டத்திற்கான முதன்மை முரண்பாடா, அவ்வாறாயின் எந்த நிகழ்ச்சிப் போக்கின் எந்த இடைக் கட்டத்திற்கு? அல்லது முதன்மை நிகழ்ச்சிப் போக்கிற்குக் காரணமான முரண்பாடாய் இருப்பதால் வந்த முதன்மை முரண்பாடா? புதிய ஜனநாயகப் புரட்சி என்ற நிகழ்ச்சிப் போக்கின் இடைக் கட்டத்திற்கான முதன்மை முரண்பாடாகவும், ஜனநாயகப் புரட்சி என்ற முதன்மை நிகழ்ச்சிப் போக்கிற்குக் காரணமான முரண்பாடாகவும் இது இருக்கிறது என்று கூறுவார்களானால் இந்திய சமுதாயத்தில் அவர்கள் மூன்று நிகழ்ச்சிப் போக்குகள் இருப்பதாகக் கூற வேண்டும்.

சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கு, இடைக் கட்டம், முதன்மை முரண்பாடு, அடிப்படை முரண்பாடு பற்றிய குழறுபடியில் மா. அ. க. வினர் இதற்கு மேல் போக முடியாது.

4

# அடிப்படை முரண்பாடும் முதன்மை முரண்பாடும் — மாவோவின் மேற்கோளைத் திரித்துப் புரட்டுகின்றனர் மா. அ. க. வினர்

"ஒரு சிக்கலான பொருளினுடைய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கில் பல முரண்பாடுகள் இருப்பினும் அவற்றில் ஒன்றின் வாழ்வும் வளர்ச்சியும்தான் பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கின்ற அல்லது செல்வாக்கு செலுத்துகின்ற முதன்மை முரண்பாடாக இருக்கும்" (முரண்பாடு பற்றி) என்று மாவோ குறிப்பிட்டார்.

முதன்மை முரண்பாடு பற்றி மாவோ கொடுத்த விளக்கத்தை சரியாகப் புரிந்துகொள்ளாத மா. அ. க. வினர் அடிப்படை முரண்பாடுதான் முதன்மை முரண்பாடாயிருக்க முடியும் என்கின்றனர். அதற்கு ஆதாரமாக மாவோவின் கீழ்க்கண்ட மேற்கோளை எடுத்துக் காட்டுகின்றனர்.

> "ஒரு பொருளினுடைய வளர்ச்சியின் நீண்ட நிகழ்ச்சிப் போக்கில் அடிப்படை முரண்பாட்டின் இயல்பும் அந்த நிகழ்ச்சிப் போக்கின் சாராம்சமும் மாறாமல் இருக்கும்போதே நீண்ட நிகழ்ச்சிப் போக்கில் ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்குப் போகும்போது அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்படுகின்ற பல பெரிய, சிறிய முரண்பாடுகள் ......"

இம்மேற்கோளில் "அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்படுகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்தப்படுகின்ற பல பெரிய, சிறிய முரண்பாடுகள்" என்று மாவோ குறிப்பிடும் வார்த்தை களைக் கொண்டு ஒரு நிகழ்ச்சிப் போக்கின் ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் அடிப்படை முரண்பாடுதான் முதன்மை முரண்பாடாக இருக்க முடியும் என்று மா. அ. க. வினர் வாதிடுகின்றனர். இது தவறான தாகும். புதிய முரண்பாடுகள் அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்

படிப்பகம்

www.padippkam.com



பட்டாலும், செல்வாக்குச் செலுத்தப்பட்டாலும், அதன் காரணமாக எழுந் தாலும் பிற முரண்பாடுகளின் தீர்வுக்கு இட்டுச் செல்வதாக அமைவ தில்லை. முதன்மை முரண்பாட்டின் தீர்வு மட்டுமே பிற முரண்பாடு களின் தீர்வுக்கு இட்டுச்செல்கிறது. மேலும் மா. அ. க. வினருடைய தவறை அவர்களுடைய சொந்த முரண்பாடே தெளிவுபடுத்துகிறது.

இவர்கள் கூற்றுப்படி இன்றைய சமுதாயத்தில் நிலப்பிரபுத்துவத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடும் ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாடும் அடிப்படை முரண்பாடுகளாக நிலவுகின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்றுதான் புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டம் நிறைவுறும் வரை முதன்மை முரண்பாடாக இருக்கவேண்டும்.

அவர்களே கூறுகிறார்கள் :

"இந்திய சமுதாயத்தில் உள்ள இரு அடிப்படை முரண்பாடுகளில் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்படுகிற சமுதாய நிகழ்ச்சிப் போக்கு, ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாட்டால் தீர்மானிக்கப்படுகிற சமுதாய நிகழ்ச்சிப் போக்கு என்ற இரண்டு சமுதாய நிகழ்ச்சிப் போக்குகள் வினையாற்றிக் கொண்டிருக்கின்றன..... இந்த இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளில் எந்த நிகழ்ச்சிப் போக்கு குறிப்பிட்ட இடைக் கட்டத்தில் முதன்மை பாத்திரம் வகிக்கிறது என்று தீர்மானித்து அதன் அடிப்படையில் முதன்மை முரண்பாடாக அந்த நிகழ்ச்சிப் போக்குக்கு காரணமான முரண்பாட்டைக் கொள்ளவேண்டும்"

—மா. அ. க. பக். 37

இன்றைய சமுதாயத்தில் மூன்றாவது அடிப்படை முரண்பாடோ மூன்றாவது 'நிகழ்ச்சிப் போக்கோ' இல்லை. ஆதலால் மா. அ. க. வினர் கருத்துப்படி இங்கு மூன்றாவது முதன்மை முரண்பாடு தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் இதற்கு முரண்பாடாக அவர்கள் கூறுகிறார்கள்:

"இன்னொரு சிக்கலான புதிய சூழ்நிலை தோன்றும்போது அதாவது உள்நாட்டுப்போர் முற்றும்போது ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடிகளான தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களினதும் வாழ்வையே அச்சுறுத்தும் அளவுக்கு வளரும்போது ஏகாதிபத்தியம் உள்நாட்டு பிற்போக்குவாதிகளுக்கு நேரடியாக படைகளை அனுப்பிவைப்பது அல்லது நவீன காலனிய



அரசுகளாக மாற்றும்போது, அந்நிய ஏகாதிபத்தியமும் உள்நாட்டு பிற்போக்கு சக்திகளும் ஒருபுறமும் பரந்துபட்ட மக்கள் ஒரு புறமும் கொண்ட முரண்பாடு முதன்மை முரண்பாடாகின்றது."

— மா. அ. க. பக். 44-45

அதாவது, ஏகாதிபத்தியம் பிற்போக்குவாதிகளுக்கு இராணுவத்தை அனுப்பி வைக்கும்போது அல்லது நவீன காலனியாக்கும் போது ஏகாதிபத்தியம் மற்றும் பிற்போக்குவாதிகளுக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகிறது என்கின்றனர். ஆனால், இந்த முரண்பாடு அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றல்ல. அடிப்படை முரண்பாடல்லாத ஒரு முரண்பாடு முதன்மை முரண்பாடானது எவ்வாறு? அவ்வாறாயின் மாவோ, அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்படுகிற அல்லது செல்வாக்கு செலுத்தப்படுகிற முரண்பாடுகள் என்று குறிப்பிட்டாரே அது தவறா அல்லது மா. அ. க. வினர் அதற்கு கொடுத்த விளக்கம் தவறா? சந்தேகத்திற்கிடமின்றி மா. அ. க. வினர் மாவோவிற்கு கொடுத்த விளக்கம்தான் தவறாகும். இங்கு முரண்பாடுகளில் சிக்கிக் கொள்வது மாவோ அல்ல, மா. அ. க. வினரே.

புரட்சிக்கு முந்திய சீன சமுதாயத்தில் அடிப்படை முரண்பாடுகளல்லாத முரண்பாடுகளும் முதன்மை முரண்பாடுகளாக இருந்தன என்பது வரலாற்று உண்மை.

அடிப்படை முரண்பாடு அல்லாத வேறொரு முரண்பாடு அதாவது ஏகாதிபத்தியம் மற்றும் உள்நாட்டு பிற்போக்குவாதிகளுக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடு ஆகும் வாய்ப்பைப் பற்றி மாவோ கூறினார் :

"உள்நாட்டுப் புரட்சி யுத்தம் ஏகாதிபத்தியத்தையும் அதனுடைய ஏவல் நாய்களையும்-அதாவது உள்நாட்டுப் பிற்போக்குவாதி களையும்- அழிக்கிற அளவுக்கு வளர்ச்சி பெறும்போது ஏகாதிபத்தியம் தனது ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக அடிக்கடி வேறுவேறு முறைகளைக் கையாள்கிறது. ஒன்று ஏகாதிபத்தியம் புரட்சிகர அணிகளைப் பிளவுபடுத்த முயல்கிறது. அல்லது உள்நாட்டுப் பிற்போக்குக் கும்பலுக்கு உதவுவதற்காக நேரடியாக தனது இராணுவத்தை அனுப்புகிறது. இந்தச் சமயத்தில் ஏகாதிபத்தியமும் உள்நாட்டு பிற்போக்குக் கும்பலும் வெளிப் படையாக ஓரணியிலும் மக்கள் எதிர் அணியிலும் நின்று முதன்மை

படிப்பகம்

www.padippkam.com



முரண்பாட்டை உருவாக்குகின்றனர். இந்த முதன்மை முரண்பாடே மற்ற முரண்பாடுகளின் வளர்ச்சியைத் தீர்மானிப்பதாக அல்லது செல்வாக்கு செலுத்துவதாக அமைகிறது"

—முரண்பாடு பற்றி (MSW 675 NBA)

மேலே குறிப்பிட்ட முரண்பாடு புரட்சிக்கு முந்திய சீன சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றல்ல. மேலும் ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீனத்தைக் காலனியாக்கும் நோக்கத்துடன் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தபோது மாவோ எழுதினார் :

"சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகி உள்நாட்டு முரண்பாடுகள் ஒரு இரண்டாந்தர துணைநிலையை அடைந்ததால் சீனத்தின் சர்வதேசிய உறவுகளிலும், உள்நாட்டு வர்க்க உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அவை தற்போதைய நிலைமையில் ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்தைத் தோற்றுவித்துள்ளது......"

"சீனாவிற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் இடத்தில் சீனத்திற்கும் ஜப்பானிய ஏகாதிபத்தியத் திற்கும் இடையிலான விசேசமாக வெளிப்படையான கூர்மையான முரண்பாடு இடம் பெற்றுள்ளது. ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீனாவை முற்றாக வென்று அடிமைப்படுத்தும் கொள்கையை மேற்கொள்கிறது. இதன் விளைவாக சீனாவுக்கும் இதர சில ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் இடையிலான முரண்பாடு இரண்டாந்தர நிலையை அடைந்துள்ளன. எமது ஐக்கிய முன்னணியின் நோக்கம் ஜப்பானை எதிர்ப்பதாக இருக்கவேண்டுமேயொழிய ஒரே நேரத்தில் எல்லா ஏகாதிபத்திய வல்லரசுகளையும் எதிர்ப்பதாக இருக்கக் கூடாது."

— ஜப்பானிய எதிர்ப்புக் காலகட்டத்தில்
சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடமைகள்.

புரட்சிக்கு முந்திய சீனத்தில் ஏகாதிபத்தியத்திற்கும் சீனத் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றாகும். ஜப்பான் ஏகாதிபத்தியத்திற்கும் சீனத் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு அடிப்படை முரண்பாடல்ல. ஆனால், ஜப்பான் ஆக்கிரமிப்பின் போது அது முதன்மை முரண்பாடாக இருந்தது. அதே போல் ஜப்பான் ஏகாதிபத்தியம் 1945இல் விரட்டியடிக்கப்பட்ட பின்னர் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற



கோமிண்டாங் பிற்போக்குக் கும்பலின் அரசாங்கத்தால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட ஆளும் வர்க்கங்களான பெரு முதலாளிகள், பெரு நிலப்பிரபுக்கள் வர்க்கங்களுக்கும் பரந்துபட்ட சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடாக இருந்தது.

– ஆதாரம் : ஹோ கான்-சி யின் 'நவசீனப் புரட்சியின் வரலாறு' -
பீகிங் பல்கலைக்கழக வெளியீடு

எனவே, அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றுதான் முதன்மை முரண்பாடாக முடியும் என்ற மா.அ.கவினரின் வாதம் ஆதாரமற்றதும் தவறானதும் ஆகும் என்பதை சொல்ல வேண்டியதில்லை.

ஒரு சமுதாயத்தில் நிலவும் அடிப்படை முரண்பாடுகள் அச்சமுதாயத்தில் நிலவும் பிற முரண்பாடுகள் அனைத்தையும் – அச்சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கு முடியும் வரை – தீர்மானிப்பவையாகவும், அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துபவையாகவும் இருக்கின்றன. அது அந்த சமுதாய நிகழ்ச்சிப் போக்கு முழுமைக்கும் உரிய இயல்பாகும். இதையே மாவோவின் 'அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்பட்ட அல்லது செல்வாக்குச் செலுத்தப்பட்ட பெரிய, சிறிய பல முரண்பாடுகள்' என்ற வார்த்தைகள் தெளிவு படுத்துகின்றன. ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கின் குறிப்பிட்ட இடைக் கட்டத்தில் நிலவும் முரண்பாடுகளில் எந்த முரண்பாட்டின் வாழ்வும் வளர்ச்சியும் பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பதாக அல்லது செல்வாக்குச் செலுத்துவதாக இருக்கிறதோ அந்த முரண்பாடு அந்த இடைக் கட்டத்தின் முதன்மை முரண்பாடு எனப்படுகிறது. சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கு முழுமைக்கும் அடிப்படை முரண்பாடாய் இருந்து பிற முரண்பாடுகளின் வாழ்வையும், வளர்ச்சியையும் தீர்மானிக்கும் முரண்பாடுகளுக்கும், வளர்ச்சிப் போக்கின் குறிப்பிட்ட இடைக் கட்டத்தில் மட்டும் பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கின்ற முரண்பாட்டுக்கும் இடையிலான வேறுபாட்டை மாவோ தெளிவாகவே கையாண்டிருந்ததால் அடிப்படை முரண்பாடுகளல்லாத முரண்பாடுகள் முதன்மை முரண்பாடாவதை அவர் தெளிவாக்க முடிந்தது. ஆனால், இவ்விசயங்களில் குளறுபடிக்கு உள்ளாகியிருக்கும் மா. அ. க. வினர் மாவோவின் மேற்கோளிலிருந்தும், வரலாற்றில் இருந்தும் கற்றுக் கொள்வதற்குப் பதிலாக மாவோ மேற்கோளுக்கு முரண்பட்ட அர்த்தம் கற்பிக்கின்றனர்.

www.padippkam.com

# 5

# முதன்மை முரண்பாடும் அரசியல் அதிகாரமும் – புரட்சியின் இடைக் கட்டங்கள் மற்றும் குறிப்பான திட்டங்களை மறுக்கின்றனர் மா. அ. க. வினர்.

"அரசியல் அதிகாரம் ஒரு வர்க்கத்தின் கையிலிருந்து மற்றொரு வர்க்கத்தின் கைகளுக்கு வந்து சேருவதுதான் புரட்சியின் முதன் முதலான முக்கியமான, அடிப்படையான அறிகுறி" என்றார் லெனின்

— மார்க்ஸ்-ஏங்கல்ஸ் மார்க்சியம் -மாஸ்கோ 1976 பக். 154

முதலாளி வர்க்கத்தின் கையிலிருந்து பாட்டாளி வர்க்கத்தின் கைகளுக்கு அரசியல் அதிகாரம் வந்து சேருவதுதான்-பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அமைக்கப்படுவதுதான் - சோசலிசப் புரட்சியின் முதன்மையான முக்கியமான, அடிப்படையான அறிகுறியாகும்.

ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மற்றும் அவற்றுக்குத் துணைபோகும் வர்க்கங்களின் கரங்களிலிருந்து ஆட்சி அதிகாரம் பாட்டாளி வர்க்கத் தலைமையில் புரட்சிகர வர்க்கங்களின் கரங்களுக்கு வருவதுதான் -மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் அமைவதுதான்-புதிய ஜனநாயகப் புரட்சியின் முதன் முதலான, முக்கியமான அடிப்படையான அறிகுறியாகும்.

பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத் தளைகளால் கட்டுண்டு கிடக்கும் நாடுகளில் சுதந்திரமான, தேசிய



உற்பத்திக்கு வகை செய்யும் புதிய ஜனநாயக சமுதாயத்தை அமைப்பதற்கு போராடுகிறது. இதற்கு முதன்மையாக மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை அமைப்பது முக்கியமானதும் அடிப்படையானதும் ஆகும். ஆனால், ஏற்கெனவே இந்நாடுகளில் இருக்கும் எதிர்ப்புரட்சி வர்க்கங்களின் அரசியல் அதிகாரத்தை வீழ்த்தாமல் இதைச் செய்ய முடியாது. அதற்கு பரந்துபட்ட புரட்சிகர மக்களை அணிதிரட்டுவதும், அரசியல்படுத்துவதும், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஐக்கிய முன்னணியாக வளர்ப்பதும், படைகட்டுவதும் அவசியமாகும் அதற்குரிய அரசியல், பொருளாதார, கலாச்சாரத் திட்டங்களே புதிய ஜனநாயகத் திட்டம் எனப்படுகிறது.

ஆனால், புதிய ஜனநாயகப் புரட்சி காலகட்டம் முழுமையிலும் - புரட்சி நிறைவேறும் முன்னர்-புரட்சி, எதிர்ப்புரட்சி சக்திகளிடையே வர்க்கச் சேர்க்கையிலும் அணிவகுப்பிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலைகளும் உருவாகின்றன. உதாரணமாக ஒரு ஏகாதிபத்தியம் நாடு முழுவதையும் காலனியாக்குவதற்கான ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்கும்போது அல்லது காலனியாக்கும்போது குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் பிற ஏகாதிபத்தியங்களுக்கும் இடையே முரண்பாடுகள் கூர்மையடைகின்றன. ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியம் உள்நாட்டு பிற்போக்கு வர்க்கப் பிரிவினரின் உடைமையின் மீதும் ஆதிக்கம் செலுத்துவதாய் இருப்பதால் குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் உள்நாட்டு பிற்போக்குப் பிரிவினருக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைவதற்கான வாய்ப்புள்ளது. இவ்வாறு எதிரி முகாமில் குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியம் மட்டும் தனிமைப்படுவதற்கான சூழ்நிலை உருவாகிறது. (உதாரணம் - சீனத்தில் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தக் காலகட்டம்) அல்லது உள்நாட்டில் ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடு – பிற்போக்கு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடு – கூர்மையடைந்து அதன் விளைவாக – பாசிசம் அல்லது இராணுவ சர்வாதிகாரம் பிரகடனப்படுத்தப்படும் நிலை உள்ள காலங்களில் – ஆளும் வர்க்கங்களிலேயே ஒரு கும்பலின் அதிகாரம் ஏற்பட்டு பிற பகுதியினரிடமிருந்து தனிமைப்படும் சூழ்நிலை உருவாகிறது; அல்லது உள்நாட்டில் தனது ஆதரவு பிற்போக்கு கும்பலுக்கு ஆதரவாக ஒரு ஏகாதிபத்தியம் இராணுவத்தை அனுப்புமானால் அல்லது நவீன காலனியாக்குமானால் – பொம்மையாட்சியை நிறுவுமானால் – அந்த குறிப்பிட்ட ஏகாதிபத்தியம்

www.padippkam.com



மற்றும் அதன் ஆதரவு பிற்போக்குக் கும்பலுக்கும் ஆளும் வர்க்கங்களின் பிற பிரிவுக்கும் இடையே முரண்பாடு கூர்மையடைந்து ஆதிக்கப் பிரிவு தனிமைப் படுகிறது.

இத்தகைய நிலைமைகளில் பாட்டாளி வர்க்கம் அடிப்படை முரண்பாடுகளால் தீர்மானிக்கப்பட்ட புரட்சியின் நட்பு சக்திகளையும் எதிரி சக்திகளையும் அதே அணி வரிசையில் அதே திட்டத்தின் அடிப்படையில் கையாள முடியாது. ஏனெனில் புரட்சியின் நட்பு மற்றும் எதிரி சக்திகளிடையே ஏற்பட்டுள்ள நிலை மாற்றங்களால் அவற்றுக்கேற்ப குறிப்பான அரசியல், பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்து அதன் அடிப்படையில் ஐக்கிய முன்னணியும், படையும் கட்டப்பட்டு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கி முன்னேற வேண்டும்.

உதாரணமாக ஒரு ஏகாதிபத்தியம் படை எடுத்திருக்கும் போது அல்லது காலனியாக்கும் போது அனைத்து ஏகாதிபத்திய மற்றும் நிலப்பிரபுத்துவ சக்திகளையும் எதிர்த்து அல்ல குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஐக்கிய முன்னணியைக் கட்ட வேண்டும். அதற்கான குறிப்பான அரசியல், பொருளாதாரத் திட்டம் முன் வைக்கப்பட வேண்டும்.

ஒரு ஏகாதிபத்தியத்தின் நவீன காலனியாக மாறியிருக்கும் போது அல்லது தனது ஆதரவு பிற்போக்கு சக்திகளுக்கு ஆதரவாய் ஏகாதிபத்தியம் இராணுவத்தை அனுப்பி இருக்கும்போது அந்தக் குறிப்பிட்ட ஏகாதிபத்தியம் மற்றும் அதன் ஆதரவு பிற்போக்கு சக்திகளுக்கு எதிராக ஐக்கிய முன்னணியைக் கட்ட வேண்டும். அதற்கேற்ப குறிப்பான அரசியல், பொருளாதாரத் திட்டங்கள் முன் வைக்கப்பட வேண்டும்.

உள்நாட்டிலேயே ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான ஒரு கும்பல் பாசிச அல்லது இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவும் போது அல்லது நிறுவ முயலும் போது குறிப்பிட்ட பாசிச அல்லது இராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்து ஐக்கிய முன்னணியைக் கட்ட வேண்டும். அதற்கான குறிப்பான அரசியல், பொருளாதாரத் திட்டங்களை முன் வைக்க வேண்டும்.

இத்தகைய நிலைமைகளில் எல்லாம் புரட்சிகர ஐக்கிய



முன்னணியின் எதிரிகளும், அதன் குறிப்பான அரசியல், பொருளாதாரத் திட்டங்களும் மாறியிருப்பதற்குக் காரணம் அரசியல் அதிகாரத்தில் எதிர்ப்புரட்சி வர்க்கம் மற்றும் அவற்றின் ஆதரவுப் பிரிவு அனைத்தும் இருப்பதற்கு பதிலாக அவற்றுள் ஏற்பட்ட முரண்பாடுகளின் விளைவாய் (அவற்றுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டின் விளைவாயும் கூட) அதிகாரம் எதிர்ப்புரட்சி வர்க்கங்களிலேயே ஒரு பிரிவினரின் கைக்கு மாறியிருக்கிறது அல்லது மாறிக்கொண்டிருக்கிறது என்பதேயாகும். இதனால் எதிர்ப்புரட்சி சக்திகளின் முரண்பாடுகளைப் பயன்படுத்தி எதிரிகளை மேலும் பலவீனப்படுத்தவும், ஒவ்வொரு எதிரியாக வீழ்த்தி புரட்சியை இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்லவும் சாதகமான நிலைமைகள் புரட்சிகர சக்திகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதேயாகும். எனவே இத்தகைய நிலைமைகளில் எதிரிகளுக்கிடையிலான முரண்பாடுகளைப் பயன்படுத்தி முதன்மை எதிரியை எதிர்த்து அதிகபட்ச சக்திகளை புரட்சியின் பக்கம் திரட்டும் நோக்கத்திற்காக ஐக்கிய முன்னணிக் கொள்கையும் அதற்கான அரசியல், பொருளாதாரத் திட்டங்களும் பாட்டாளி வர்க்க இயக்கத்தால் முன்வைக்கப்படுகின்றன.

இத்தகைய குறிப்பான திட்டங்கள் (Specific programme) புதிய ஜனநாயகப் புரட்சியின் முழுமையான திட்டமாக (பொதுத் திட்டமாக-General programme) இருப்பதில்லை. அதாவது எதிர்ப்புரட்சி வர்க்கங்களை முழுமையாக அரசியல், பொருளாதார ரீதியில் வீழ்த்துவதாகவும், மக்கள் ஜனநாயக அரசியல் அதிகாரத்தையும், பொருளாதார அமைப்பையும் நிறுவுவதாகவும் இருப்பதில்லை. ஆனால் எதிரிகளின் அரசியல் அதிகாரத்தையும் பொருளாதார அமைப்பையும் பலவீனப்படுத்துவதாகவும், மக்களின் அரசியல் அதிகாரத்தையும் பொருளாதார பலத்தையும் வளர்ப்பதாகவும் அமைகின்றன. எனவே குறிப்பிட்ட இடைக் கட்டத்தில் வைக்கப்படும் குறிப்பான திட்டங்கள் மக்கள் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதற்கான படிகளாக அமைகின்றன. நிலைமைகள் கோரும்போது இத்தகைய இடைக் கட்டங்களும் அவற்றுக்கான குறிப்பான திட்டங்களும் இன்றி ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதோ சோசலிசத்தை நோக்கி முன்னேறுவதோ சாத்தியமில்லை.

எனவே ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத் தளைகளில் கட்டுண்டிருக்கும் ஒரு நாட்டின் பாட்டாளி வர்க்கக் கட்சி அடிப்படை

படிப்பகம்

www.padippkam.com



முரண்பாடுகளையும் அதன் அடிப்படையில் புரட்சியின் கட்டத்தையும், புரட்சியின் நண்பர்களையும் எதிரிகளையும் தீர்மானித்து புதிய ஜனநாயக அரசியல், பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்தால் மட்டுமே போதுமானதல்ல. பருண்மையான நிலைமைகளில் புரட்சி, எதிர்ப்புரட்சி சக்திகளின் வர்க்கச் சேர்க்கையையும் அணிவகுப்பையும் கண்டறிவதும் எதிரிகளுக்கிடையிலான முரண்பாடு கூர்மையடைந்து (இது எதிரிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைந்ததன் நேரடி அல்லது மறைமுக விளைவாக இருக்கும்) அரசியல் அதிகாரத்தில் பண்பு வகையான மாற்றத்தை ஏற்படுத்தி இருக்குமாயின் அதைப் பருண்மையாகக் கணக்கில் கொண்டு ஐக்கிய முன்னணிக் கொள்கையையும் அதற்குரிய குறிப்பான அரசியல் பொருளாதாரத் திட்டத்தையும் முன்வைக்க வேண்டும்.

இத்தகைய நிலைமைகளில் அதிகாரத்தில் இருக்கும் எதிர்ப்புரட்சி வர்க்கப் பிரிவை வீழ்த்தாமல் மொத்த எதிர்ப்புரட்சி வர்க்கங்களையும் வீழ்த்துவதோ புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்வதோ சாத்தியமில்லை. அதாவது அதிகாரத்தில் இருக்கும் எதிர்ப்புரட்சி வர்க்கங்களுக்கும் அதை எதிர்த்துப் போராடும் பரந்துபட்ட சக்திகளுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்க்காமல் சமுதாயத்தில் அப்போது நிலவும் (அடிப்படை முரண்பாடுகள் உட்பட) எந்த முரண்பாட்டின் தீர்வை நோக்கியும் முன்னேற முடியாது. எனவே அதிகாரத்தில் இருக்கும் வர்க்கப் பிரிவுகளுக்கும் அதை எதிர்த்து அதிகாரத்திற்காகப் போராடும் பரந்துபட்ட வர்க்கச் சக்திகளுக்கும் இடையிலான முரண்பாட்டின் வாழ்வும் வளர்ச்சியுமே அப்போது நிலவும் பிற முரண்பாட்டின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பவையாக இருக்கின்றன. எனவே அதுதான் இந்தக் கட்டத்தின் முதன்மை முரண்பாடாக இருக்கிறது.

அடிப்படை முரண்பாடுகளால் தீர்மானிக்கப்பட்ட புரட்சிகர வர்க்கங்கள் எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களின் அரசியல் அதிகாரத்தையும், பொருளாதார அமைப்பையும் வீழ்த்திவிட்டு புரட்சிகர அரசியல் அதிகாரத்தையும் பொருளாதார அமைப்பையும் நிறுவ வேண்டுமானால் ஒவ்வொரு குறிப்பிட்ட இடைக் கட்டத்திலும் நிலவும் அரசியல் அதிகாரத்தில் இருக்கும் வர்க்கங்களுக்கும் (அல்லது வர்க்கப் பிரிவுகளுக்கும்) அவற்றை எதிர்த்து அதிகாரத்திற்காகப் போராடும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதன் மூலமாகவே முடியும் என்பதால் ஒவ்வொரு இடைக் கட்டத்திலும்



ஆளும் வர்க்கங்களுக்கும் அல்லது ஆளும் வர்க்கப் பிரிவுகளுக்கும், அதை எதிர்த்து அதிகாரத்திற்காகப் போராடும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடே குறிப்பிட்ட இடைக் கட்டத்தின் முதன்மை முரண்பாடாக இருக்கிறது.

அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்பட்ட எதிர்ப்புரட்சிகர வர்க்கம் முழுமையும் ஆட்சி அதிகாரத்தில் இருக்குமாயின் அப்போது அடிப்படை முரண்பாடும் முதன்மை முரண்பாடும் ஒன்றாகவே இருக்கிறது. (உதாரணம்) முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளி வர்க்கமே ஆட்சி அதிகாரத்தில் இருப்பது. ஆனால் இங்கும் கூட உள்நாட்டில் பாசிசம் கொண்டு வரப்பட்டு முதலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவு மட்டும் ஆட்சி அதிகாரத்தில் இருக்குமாயின்- பாசிசத்தைக் கொண்டுவரும் நிலை நிலவுமாயின் முதன்மை முரண்பாடு மாறுகிறது; அல்லது ஒரு ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக்கு அந்த நாடு உள்ளாகும் போதும் முதன்மை முரண்பாடு மாறுகிறது. ஏனெனில் இத்தகைய சூழ்நிலையில் பாசிச கும்பலையோ அல்லது ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியத்தையோ முறியடிப்பதுதான் அதாவது பாசிசத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டையோ, ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாட்டையோ தீர்ப்பதுதான் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு முதல் தேவையாக உள்ளது. இம்முரண்பாட்டைத் தீர்க்காமல் முதலாளி, தொழிலாளி வர்க்க முரண்பாட்டைத் தீர்ப்பதை நோக்கி முன்னேற முடியாது என்பதால் அதன் வாழ்வும் வளர்ச்சியுமே பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பதாக இருக்கிறது.

எனவே முதன்மை முரண்பாடு என்பது எப்போதும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் வர்க்கங்களுக்கும் அல்லது ஆக்கிரமிக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் அவற்றை எதிர்த்து அதிகாரத்திற்காகப் போராடும் பரந்துபட்ட மக்கள் அல்லது நாட்டிற்கும் இடையிலானதாக இருக்கிறது. ஆட்சி அதிகார வகையில் பண்பு வகையான மாற்றம் ஏற்படும்போது முதன்மை முரண்பாடு மாறுகிறது. ஏனெனில் முதன்மையாக அரசியல் அதிகாரத்தையே மையங்கொண்டு நடக்கும் வர்க்கப் போராட்டத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் வர்க்கங்களுக்கும் அதனை எதிர்த்து அதிகாரத்திற்காகப் போராடும் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டின் தீர்வே அப்போது நிலவும் பிற முரண்பாடுகளின் தீர்வைச் சாத்தியமாக்கும் என்பதால் அந்த முரண்பாட்டின் வாழ்வும்

www.padippkam.com



வளர்ச்சியுமே பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பதாயும் செல்வாக்குச் செலுத்துவதாயும் இருக்கிறது. முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிப்பது பற்றி மாவோவின் கருத்தை இவ்வாறுதான் விளக்கவேண்டும். ஏனெனில் இது மட்டுமே குறிப்பிட்ட இடைக் கட்டத்தில் முதன்மை எதிரியை எதிர்த்து புரட்சியின் பக்கம் அதிகபட்ச நட்புச் சக்திகளைத் திரட்டவும் அமைப்பாக்கவும் சரியான ஐக்கிய முன்னணிக் கொள்கையை முன்வைக்க வழிகாட்டுவதாயும் இருக்கிறது.

ஆனால் மா. அ. க. வினர் இதற்கு மாறாக கீழ்க்கண்டபடி கூறுகின்றனர் :

"புரட்சி என்பது மேல்கட்டுமானத்தில் மட்டுமல்ல இறுதியில் அடித்தளத்திலும் (உற்பத்தி உறவுகளில்) மாற்றத்தைக் கொண்டுவருகிறது. புரட்சி என்ற அரசியல் நடவடிக்கைக்கு அடிப்படையாகவும், தூண்டுகோலாகவும் இருப்பது சமூகப் பொருளாதாரம்தான்; புரட்சி செய்கின்ற பின்விளைவும் சமூகப் பொருளாதார மாற்றம்தான்; எனவே புரட்சிக்கான முதன்மை முரண்பாட்டைக் கணிக்கும்போது அரசியல் நடவடிக்கை, அரசியல் அதிகாரத்தை மட்டும் வைத்து தீர்மானிப்பது என்பது சரியல்ல, மொத்த அரசியல் பொருளாதாரக் கண்ணோட்டத் திலிருந்தே தீர்மானிக்க வேண்டும்."

— மா. அ. க. பக். 15

இவர்கள் கருத்துப்படி உற்பத்தி முறையில் மாற்றங்கள் கொண்டுவரக்கூடிய அரசியல் மாற்றங்கள் நிகழும்போது மட்டும்தான் முதன்மை முரண்பாடு மாறுகிறது; அல்லது உற்பத்தி முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தும் அரசியல் மாற்றங்களை வைத்தே முதன்மை முரண்பாட்டைக் கணிக்க வேண்டும்; உற்பத்தி முறையில் மாறுதல் கொண்டு வரக்கூடிய அரசியல், பொருளாதாரத் திட்டங்கள் வைத்து குறிப்பான திட்டம் வகுக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஐக்கிய முன்னணி கட்ட வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள் :

"புரட்சியின் சாராம்சத்தைத் தீர்மானிப்பது உற்பத்திச் சக்திகளை விடுவிப்பது என்பதோடு நேரடியாக சம்பந்தப்பட்டது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு ஏற்பட்ட தளைகளால் அல்லல்படும் மக்கள் அனைவரையும் வென்றெடுக்கத் தகுதியான அரசியல், பொருளாதாரத்



திட்டம் வைத்து மக்களைத் திரட்டி படையைக் கட்டி பின்னரே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும்"

—அ. கோ. க. தொ. 3 பக். 19

புரட்சிகர வர்க்கங்களுக்கும் எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைந்து எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களின் அரசியல் அதிகாரத்தில் பண்பு வகையில் மாறுதல் உருவாகுமாயின் அதாவது எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களின் ஒரு பிரிவு அதிகாரத்திலிருந்து தள்ளப்படுமானால் - அப்போது கூட உற்பத்தி முறையில் மாற்றத்தைக் கொண்டுவரக் கூடிய அரசியல், பொருளாதாரத் திட்டத்தையே குறிப்பான திட்டமாக முன்வைத்து ஐக்கிய முன்னணியைக் கட்டி மக்களைத் திரட்ட வேண்டும் என்கின்றனர்.

புதிய ஜனநாயகப் புரட்சிக்கான அரசியல் பொருளாதாரத் திட்டமும் சோசலிசப் புரட்சிக்கான அரசியல் பொருளாதாரத் திட்டமும் உற்பத்தி முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான அரசியல் பொருளாதாரத் திட்டங்கள் ஆகும். முதலாளித்துவ நாடுகளில் சோசலிசப் புரட்சிக்கான திட்டமும், ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ தளைகளுக்கு உட்பட்டிருக்கும் நாடுகளில் புதிய ஜனநாயகப் புரட்சிக்கான திட்டமும் பாட்டாளி வர்க்கத்தால் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் அடிப்படை முரண்பாடுகள் மாறாமலேயே அரசியல் அதிகாரத்தில் பண்பு வகையான மாற்றம் ஏற்படும்போது அது புரட்சி, எதிர்ப்புரட்சி வர்க்க அணிசேர்க்கையில் - அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஒரு பொதுத் திட்டம் வைத்துப் போராடிக் கொண்டிருக்கும் பாட்டாளி வர்க்க இயக்கம் இத்தகைய நிலைமைகளில் குறிப்பான திட்டம் ஒன்றை வைத்து ஐக்கிய முன்னணி கட்டி போராடுகிறது. இத்திட்டம் அரசியல் அரங்கில் ஏற்பட்டிருக்கும் பருண்மையான மாற்றங்களைப் புரிந்துகொண்டு, புரட்சிகர மக்கள் பொதுத்திட்டத்தை நிறைவேற்றும் அரசியல் மாற்றத்துக்கான திசையில் முன்னேறுவதற்கான அதிக வாய்ப்பை ஏற்படுத்தவும் புரட்சிகர சக்திகளை பலப்படுத்தவும் எதிர்ப்புரட்சிகர சக்திகளை பலவீனப்படுத்தவும் உதவுகிறது.

உதாரணமாக, ஒரு முதலாளிய நாட்டில் முதலாளி வர்க்கம் பாசிசத்தைக் கொண்டு வருமானால் முதலாளித்துவ வர்க்கத்தைத் தூக்கிஎறிந்து சோசலிசத்தை நிறுவும் தனது பொதுத்திட்டத்தைக்

படிப்பகம்

www.padippkam.com



கைவிடாமலேயே அதை நோக்கி மேலும் முன்னேறும் பாதையை விரிவுபடுத்துவதற்காக பாசிச எதிர்ப்புத் திட்டம் ஒன்றை வைக்கிறது. இதற்காகக் கட்டப்படும் முன்னணி முதலாளித்துவ அரசியல் பொருளாதார உற்பத்தி முறையை மாற்றுவதில்லை. ஆனால் பாசிசத்தை எதிர்த்த போராட்டத்தில், பாட்டாளி வர்க்கம், முதலாளி வர்க்கத்தையே அகற்றுவதற்கான போராட்டத்திற்காக அதிக பலம் பெறுகிறது; முதலாளி வர்க்கம் பலவீனமடைகிறது. எவ்வாறெனில் இதுவரை முதலாளித்துவ முகாமில் இருந்த முதலாளித்துவ சக்திகள் பாசிசத்தை எதிர்க்கும் நோக்கத்திற்காக இந்த ஐக்கிய முன்னணியில் திரட்டப்படும்போது அவை பாசிசத்தை எதிர்ப்பதற்காக பாட்டாளி வர்க்கத்தின் குறிப்பிட்ட அளவு ஜனநாயக உரிமைகளை அங்கீகரித்து காக்கவேண்டிய பொறுப்புக்குள்ளாகின்றன. முதலாளித்துவத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பாட்டாளி வர்க்கத்துக்கு இந்த உரிமைகள் முக்கியமான முன்னேற்றமாக அமையும்.

அதேபோல் ஒரு ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்கும்போது குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் உள்நாட்டு வர்க்கப் பிரிவுகள் அனைத்தையும் திரட்டுவதற்கான ஐக்கிய முன்னணியில் இதுவரை எதிர்ப்புரட்சி முகாமில் அல்லது அதற்கு ஆதரவாய் இருந்த சக்திகளும் இணைகின்றன. அவை அப்போது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போருக்காக பாட்டாளி வர்க்கத்தின், விவசாய மக்களின் ஜனநாயக உரிமைகளை அங்கீகரிக்கவும் அவற்றைக் காக்கவுமான அவசியத்திற்குள்ளாகின்றன. இதுவே பாட்டாளி வர்க்கம் எதிர்ப்புரட்சிகர வர்க்கங்கள் அனைத்தையும் ஒழிப்பதை நோக்கிய தனது முன்னேற்றத்தில் அதாவது உற்பத்தி முறையை மாற்றுவதற்கான அரசியல் மாற்றத்திற்கான போராட்டத்தில் ஒரு முக்கியமான முன்னேற்றப் படியாகிறது.

உதாரணமாக, ஜப்பான் ஏகாதிபத்தியம் சீனத்தை காலனியாக்கும் நோக்கத்துடன் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தபோது எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களிடையே முரண்பாடு கூர்மையடைந்தது. பிற ஏகாதிபத்தியங்களும் அவற்றின் உள்நாட்டு பிற்போக்கு சக்திகளும் கூட ஜப்பான் ஏகாதிபத்தியத்துடன் கூர்மையான முரண்பாடு கொண்டன. இந்நிலையில் ஜப்பான் ஏகாதிபத்தியத்தை பிரதானமாக எதிர்த்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணியைக் கட்டியது. ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி என்ற கொள்கையையும், அதற்கான 40 அம்ச அரசியல் பொருளாதாரத் திட்டத்தையும் - குறிப்பான திட்டம் - முன்வைத்தது. அந்த குறிப்பான திட்டம் எதிர்ப்புரட்சிகர சக்திகளை பலவீனப்படுத்தவும் புரட்சிகர சக்திகளை அரசியல் பொருளாதார ரீதியில் பலப்படுத்தவும் பொருத்தமாக இருந்தது. அத்திட்டத்தை மாவோ குறிப்பான திட்டம் அல்லது மக்களின் உடனடிக் கோரிக்கைகள் என்று அழைத்தார். அத்திட்டம் எவ்வகையிலும் உற்பத்தி முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கானதாய் இல்லை. மாறாக மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் ஆயுதம் தாங்கும் உரிமை, அரசியல் அதிகாரம் ஆகியவற்றுக்கும் உத்திரவாதம் செய்வதாகவும், எதிரிகளை பலவீனப்படுத்துவதாகவும் குறிப்பாக ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை முறியடிப்பதாகவும் இருந்தது. அத்திட்டத்தின் நோக்கமே உற்பத்தி முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதல்ல, புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்கு அதிகபட்ச ஜனநாயக உரிமை பெறுவது அவசியம் என்பதால் அதை வென்றெடுப்பதும் வளர்ப்பதுமே நோக்கமாகக் கொண்டிருந்தது.



எனவே உற்பத்தி முறையில் மாற்றம் கொண்டுவரக்கூடிய அரசியல் மாற்றத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு முன்வைக்கப்படும் அரசியல் பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே ஐக்கிய முன்னணியைக் கட்ட வேண்டும் என்பதும், முதன்மை முரண்பாடு அந்த அடிப்படையிலே தீர்மானிக்கப்படுகிறது என்பதும் உற்பத்தி முறையில் சாராம்சமான மாற்றம் ஏற்படாமல் இருக்கும்போது அரசியல் அரங்கில் பண்பு வகையான மாற்றம் ஏற்படுத்துகிறது என்பதையும் அவற்றிற்கேற்ப கட்சி தனது குறிப்பான செயல்பாடுகளை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் மறுத்துவிடுகிறது. இதனால் புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் மக்கள் அதிக ஜனநாயக உரிமைகள் பெறுவதற்கும், எதிரிகளை பலவீனப்படுத்துவதற்கும் குறிப்பான திட்டங்கள் வைத்து செயல்பட வேண்டும் என்பதையும் மறுத்துவிடுகிறது.

முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிப்பதைப் பொறுத்தே புரட்சியின் அதிகபட்ச நட்புச் சக்திகளை வென்றெடுப்பதும் எதிரியைத் தனிமைப்படுத்துவதும், சரியான ஐக்கிய முன்னணியைக் கட்டுவதும் சாத்தியம் என்று கூறும் இவர்கள் உண்மையில் உற்பத்தி முறையில் மாற்றம் ஏற்படுத்தும் அரசியல் மாற்றங்களையும் அதற்கான ஐக்கிய முன்னணி மற்றும் அரசியல் பொருளாதாரத் திட்டங்களையும் பற்றியே

படிப்பகம்

www.padippkam.com



பேசுகின்றனர். இது புரட்சியின் முழு காலகட்டத்திற்கான புரட்சி, எதிர்ப்புரட்சி வர்க்கங்களின் அணி சேர்க்கையின் அடிப்படையிலான பொதுத் திட்டமும் பொதுக் கொள்கையுமாக இருக்குமேயன்றி குறிப்பான நிலைமைகளில் – இடைக் கட்டங்களில் –புரட்சி, எதிர்ப்புரட்சி வர்க்கச் சேர்க்கை அணிவகுப்பில் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கில் கொண்டதாய் இருக்காது. எனவே இது ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் குறிப்பான ஐக்கிய முன்னணிக் கொள்கையை முன்வைக்க வேண்டும் என்பதை மறுக்கிறது. ஆனால் ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் குறிப்பான ஐக்கிய முன்னணிக் கொள்கையை முன்வைக்காமல் எதிரியை பலவீனப்படுத்துவதோ, மக்கள் அதிகபட்ச ஜனநாயக உரிமைகள் பெறுவதோ சாத்தியமில்லை என்பதால் பொதுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கூட - அவர்கள் கூறும் உற்பத்தி முறையை மாற்றுவதற்கான அரசியல் மாற்றத்திற்காகக் கூட- மக்களைத் திரட்ட முடியாது. எனவே இவர்கள் எப்போதுமே புரட்சியின் பக்கம் அதிகபட்ச மக்களை அல்ல குறைந்தபட்ச மக்களைக் கூட வென்றெடுக்க முடியாது வெறும் வாய்ச் சவடால்காரர்களாகவே மிஞ்சுவார்கள் என்பதில் ஐயமில்லை.

> "அரசியல் அதிகாரத்தை யார் கையில் வைத்திருக்கிறார்கள் என்பதன் அடிப்படையில் முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிப்பது பரந்துபட்ட மக்களைத் திரட்டுவதையும், ஐக்கிய முன்னணி, படை கட்டுவதையும் புறக்கணிக்கிறது. இதன் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே கைவிடுகிறது." என்கின்றனர் மாஅ.கவினர். (மா. அ. க. பக். 19)

ஏனெனில் இம்முறையில் உற்பத்தி உறவுகளை மாற்றும் ஒரு அரசியல் பொருளாதாரத் திட்டத்தை வைத்து ஐக்கிய முன்னணியைக் கட்ட முடியாது என்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரை உற்பத்தி உறவுகளை மாற்றும் ஒரு அரசியல் பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் ஐக்கிய முன்னணி மட்டுமே கட்டப்பட வேண்டும் என்பதாகும். பிற வகை ஐக்கிய முன்னணிகள் - மக்களின் அரசியல், ஜனநாயக உரிமைகளைப் பெறுவதை மையமாகக் கொண்டு, எதிரிகளை பலவீனப் படுத்துவதை மையமாகக் கொண்டு ஐக்கிய முன்னணிகள் - கட்டப்படக் கூடாது. அவ்வாறு கட்டப்படுவது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே கைவிடுவதாகும் என்று கருதுகின்றனர்.



இவர்களுடைய இந்த வாதம் ஜனநாயகப் புரட்சி பல்வேறு கட்டங்களின் வழியாகவே வளர்ச்சி அடைகிறது என்பதையும், அவற்றில் பாட்டாளி வர்க்கம் குறிப்பானத் திட்டங்கள் முன்வைத்துப் போராட வேண்டும் என்பதையும் மறுக்கிறது. உற்பத்தி முறையில் மாற்றம் ஏற்படுத்தும் அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்காக மட்டுமே அரசியல், பொருளாதாரத் திட்டங்கள் முன் வைக்க வேண்டும், அதன் அடிப்படையிலேயே முதன்மை முரண்பாடு மற்றும் ஐக்கிய முன்னணியைத் தீர்மானிக்க வேண்டும் என இவர்கள் கூறுவதன் மூலம் அடிப்படை முரண்பாட்டையே முதன்மை முரண்பாடு என்றும், புரட்சியின் பொதுத் திட்டத்தையே குறிப்பானத் திட்டம் என்றும் புரட்சியின் கட்டத்தையே இடைக் கட்டம் என்றும் அர்த்தப்படுத்தி முதன்மை முரண்பாடு, குறிப்பானத் திட்டம், புரட்சியின் இடைக் கட்டம் ஆகியவற்றை மறுப்பவர்களாகவும், நிராகரிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippkam.com

# 6

# சமுதாயத்தில் அடிப்படை முரண்பாடு பற்றிய மா. அ. க. வினின் கண்டுபிடிப்பு மார்க்சியத்திற்கு எதிரானது; எதிர்ப்புரட்சிகரமானது.

வர்க்க சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடு பற்றிய தமது புதிய கண்டுபிடிப்பை மா. அ. க. வினர் வெளியிட்டிருக்கிறார்கள்.

"பழைய, புதிய அடித்தளங்களுக்கு இடையேயுள்ள முரண்பாடு பழைய மேல் கட்டுமானத்திற்கும் புதிய அடித்தளத்திற்கும் இடையேயுள்ள முரண்பாடு ஆகியவையே அடிப்படை முரண்பாடுகளாகும். அடிப்படை முரண்பாடு பற்றி ஏற்கெனவே மேற்கோள் காட்டியிருந்த மாவோவின் சொற்கள் இதைத்தான் உறுதிப்படுத்துகின்றது."

—மா. அ. க. பக். 26

மா. அ. க. வினர் தமது கண்டுபிடிப்புகளுக்குத் துணையாக மாவோவின் பெயரையும் இழுத்துக் கொண்டுள்ளதால் அதைப்பற்றி ஆராய்வது மேலும் முக்கியமாகிறது.

"சோசலிச சமுதாயத்தில் உள்ள அடிப்படை முரண்பாடுகள் இன்னும் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலானதாகவும், மேல்கட்டுமானத்திற்கும் பொருளாதார அடிப்படைக்கும் இடையிலானதாகவுமே இருக்கின்றன" என்றார் மாவோ.

—மக்களிடையேயுள்ள முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி (MSW 700 NBA)

மேலும் தோழர் ஸ்டாலினுடைய தத்துவார்த்த தவறுகள் பற்றி குறிப்பிடும்போது மாவோ கீழ்க்கண்டபடி குறிப்பிட்டார்:

"சோசலிச சமுதாயத்தில் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும், மேல்கட்டுமானத்திற்கும் பொருளாதார



அடித்தளத்திற்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பதை ஸ்டாலின் நெடுங்காலமாக மறுத்தார். இறப்பதற்கு முன் "சோவியத் யூனியனில் சோசலிசப் பொருளாதாரப் பிரச்சினைகள்" எழுதிய போது, சோசலிச சமுதாயத்தில் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை தயக்கத்துடன் குறிப்பிட்டார். தவறான கொள்கைகளும், செயல்முறைகளும் சிரமத்தைத் தோற்றுவிக்கும் என்பதை ஒப்புக்கொண்டார். அப்போது கூட இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணரவில்லை. சோசலிச சமுதாயத்தை முன்னோக்கி இயக்குகிற அடிப்படையான முரண்பாடுகள் இவை என்பதை அவர் அறியவில்லை."

—மாவோ தே.ப.தொ.5, பக். 376-77

எனினும் சோசலிச சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளுக்கும் முதலாளித்துவ மற்றும் பழைய சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளுக்கும் அடிப்படையிலேயே உள்ள வேறுபாட்டையும் மாவோ குறிப்பிட்டார்.

அவர் கூறினார் :

"ஒரு சோசலிச சமுதாயத்தில் உள்ள முரண்பாடுகள் முதலாளித்துவ சமுதாயம் போன்ற பழைய சமுதாயங்களில் உள்ளவற்றிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டவை. முதலாளித்துவ சமுதாயத்தில் முரண்பாடுகள் உக்கிரமான பகைமைகளாகவும், மோதல்களாகவும், கூர்மையான வர்க்கப் போராட்டங்களாகவும் வெளிப்படுகின்றன. அவற்றை முதலாளித்துவ அமைப்பு முறையிலேயே தீர்க்க முடியாது. அவை சோசலிசப் புரட்சியால் மட்டுமே தீர்க்கப்பட முடியும். இதற்கு மாறாக சோசலிச சமுதாயத்தில் உள்ள முரண்பாடுகளின் விசயம் வேறுபட்டதாயிருக்கிறது. அங்கு அவை பகைமையுடையனவாய் இல்லை. சோசலிச அமைப்பு முறையாலேயே அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகத் தீர்க்க முடியும்."

—மக்களிடையே உள்ள முரண்பாடுகளை சரியாகக் கையாள்வது பற்றி (MSW 700 NBA)

முதல் மேற்கோளிலிருந்தே மா. அ. க. வினர் தமது மேற்கண்ட முடிவுக்கு வந்துள்ளனர். அதாவது வர்க்க சமுதாய இயக்க வடிவத்தில் அடிப்படை முரண்பாடுகள் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலானதும், பொருளாதார அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலானதும் ஆகும் என்ற மார்க்சிய

படிப்பகம்

www.padippkam.com



முடிவிலிருந்து மா. அ. க. வினர் 'பழைய, புதிய அடித்தளங்களுக்கு இடையே உள்ள முரண்பாடு, பழைய மேல்கட்டுமானத்திற்கும் புதிய அடித்தளத்திற்க்கும் இடையே உள்ள முரண்பாடு ஆகியவையே அடிப்படை முரண்பாடுகளாகும்' என்ற மார்க்சியத்திற்குப் புறம்பான முடிவுக்கு வருகின்றனர்.

> "மார்க்சும், ஏங்கல்சும் சமூக வரலாற்று வளர்ச்சிப் போக்குகளை ஆராய்வதில் பொருள்களில் உள்ள முரண்பாட்டின் விதிகளைப் பிரயோகப்படுத்தியபோது உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவு களுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டையும், சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்கும் இடையிலுள்ள முரண்பாட்டையும், இதன் விளைவாக பொருளாதார அடித்தளத்திற்கும் (அரசியல், சித்தாந்தம் போன்ற) அதன் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும் கண்டுபிடித்தார்கள். கூடவே இம்முரண்பாடுகள் எல்லாம் தவிர்க்க முடியாதபடி பல்வேறு சமூகப் புரட்சிகளுக்கும் பல்வேறுபட்ட வர்க்க சமுதாயத்திற்கும் எவ்வாறு வழிநடத்திச் செல்கின்றன என்பதையும் கண்டுபிடித்தார்கள்" — மாவோ
>
> — முரண்பாடு பற்றி (MSW 678, NBA)

இதன் பொருள் என்ன?

ஒவ்வொரு சமுதாயத்திலும் உற்பத்திச் சக்திகள் இடைவிடாது வளர்ந்துகொண்டே இருக்கின்றன. உற்பத்தி உறவுகளின் சாராம்சத்தை (நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நிலப்பிரபுத்துவ உறவு சாராம்சம், முதலாளிய சமுதாயத்தில் முதலாளித்துவ உறவு சாராம்சம் இதைப்போல) மாற்றாது என்ற நிலைமை இருக்கும்வரை உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை அனுமதிக்கின்றன. அவ்வளர்ச்சிக்கேற்ப தம்மைச் சீரமைத்துக் கொள்கின்றன. ஆனால் ஒரு கட்டத்தில் உற்பத்திச் சக்திகள் மேலும் வளர்ச்சி அடைவதற்கு, அவைத் தம்மை பண்பு வகையில் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உதாரணமாக, நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் உற்பத்திச் சக்தியின் பிரதான கூறாகிய உழைக்கும் மக்கள் பண்ணையடிமையாக இருப்பதிலிருந்து சுந்ததிர மனிதர்களாக மாறவேண்டியதிருக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் கூலியடிமைகளாய் இருப்பதிலிருந்து உற்பத்தி சாதனங்களின் எஜமானர்களாக மாற வேண்டியதிருக்கிறது. உற்பத்திச் சக்திகளின் பிரதானமான அம்சமாகிய உழைக்கும் மக்களின் இத்தகைய பண்பு வகையான மாற்றம் இன்றி உற்பத்திச் சக்திகள் மேலும் வளர்ச்சியடைவது சாத்தியமில்லை. ஆனால் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தேவையான அதன் பண்பு வகையான மாற்றத்திற்கு அவை எந்த உற்பத்தி முறையின் அங்கமாக இருங்கின்றனவோ அந்த உற்பத்தி முறையின் உற்பத்தி உறவுகளே தடையாக இருக்கின்றன. இதுவரை எந்த உற்பத்தி உறவுகளின் கட்டுக்கோப்புக்குள் அவை வளர்ந்து வந்தனவோ அந்த உற்பத்தி உறவுகளே அவற்றின் மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் விலங்காகிவிடுகின்றன. ஏனெனில் மார்க்ஸ் கூறியது போல் உற்பத்தி உறவுகள் உற்பத்தி சக்திகளுடன் இறுக்கமாகப் பிணைந்து கிடப்பதால் உற்பத்திச் சக்திகளின் பண்பு வகையான மாற்றம் என்பது அந்த உற்பத்தி முறையின் உற்பத்தி சாராம்சத்தையே உடைத்தெறிவதாக உள்ளது. இதனால் தமது குணாம்சத்தை மாற்றி வளர்ச்சி அடைவதற்காக நிற்கும் உற்பத்திச் சக்திகளுக்கும் அவற்றின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே (ஒரே உற்பத்தி முறையின் இரண்டு அங்கங்களுக்கிடையே) முரண்பாடு தீவிரமடைகிறது. உற்பத்திச் சக்திகள் உற்பத்தி உறவுகளுடன் மோதுகின்றன. இது உற்பத்திச் சக்திகளில் பிரதானமாயிருக்கும் உழைக்கும் மக்களுக்கும் அந்த உற்பத்தி உறவுகளில் கட்டுண்ட சுரண்டும் வர்க்கங்களுக்கும் இடையிலான புரட்சிகர வர்க்கப் போராட்டமாக சமூக அரங்கில் வெடிக்கிறது. இப்போராட்டமே உற்பத்தியின் வளர்ச்சிக்குத் தடையாகிவிட்ட உற்பத்தி உறவுகளை ஒழித்துவிட்டு புதிய உற்பத்தி உறவுகளை (அடித்தளத்தை) நிறுவி உற்பத்தியின் தொடர்ந்த வளர்ச்சிக்கு வகை செய்வதாய் இருக்கிறது.



இவ்வாறு உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் வெடித்த முரண்பாடே அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத் திற்கும் இடையிலான முரண்பாடாகவும் வெடிக்கிறது.

குறிப்பிட்ட உற்பத்தி முறைக்கு (அடித்தளத்திற்கு) பொருத்தமாக அமைந்திருந்த மேல்கட்டுமானம் தொடர்ந்து குறிப்பிட்ட உற்பத்தி முறையை வளர்க்கவும், கட்டிக்காக்கவும் ஒழுங்கமைத்து வருகிறது. குறிப்பிட்ட உற்பத்தி முறையில் அதன் சாராம்சம் மாறாமல் ஏற்பட்ட மாற்றங்களுக்கேற்ப தன்னில் சரிகட்டிக் கொள்கிறது. குறிப்பிட்ட உற்பத்தி முறையில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால் உற்பத்தி உறவு சாராம்சத்திலேயே மாற்றியமைக்கப்பட வேண்டிய அவசியம் நேராதவரை ஒரே சமுதாயத்தின் அங்கங்களாய் இருந்த அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையே இத்தகைய ஒற்றுமை நிலவுகிறது. ஆனால் உற்பத்தி உறவுகளில் சாராம்சமான மாற்றம் ஏற்படாமல் உற்பத்திச் சக்திகள் மேற்கொண்டு வளரமுடியாது

www.padippkam.com



என்ற நிலைமை ஏற்பட்ட பின் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு தீவிரமடைந்து நிலவும் உற்பத்தி உறவுகளை வீழ்த்துவதற்கான உற்பத்திச் சக்திகளின் போராட்டமாக (வர்க்கப் போராட்டமாக) வெளிப்பட்டபின் இதுவரை நிலவும் உற்பத்தி முறையைக் கட்டிக்காக்கவும், ஒழுங்கமைக்கவும் சேவை செய்த இதன் மேல்கட்டுமானம் இனியும் அவ்வாறு செய்யமுடியாது என்ற பௌதிக ரீதியான நிலை ஏற்பட்டுவிட்டது. அதாவது உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு தீவிரமடைந்தபோது-உற்பத்திச் சக்திகள் தம்மை பண்பு வகையில் மாற்றிக் கொள்ளாமல் இனி வளர முடியாது என்ற நிலை ஏற்பட்டபோது-உற்பத்தி உறவுகள் சாராம்சத்தில் மாறாமலேயே இதுவரை சீரமைத்துக் கொண்டது போல் இனியும் முடியாது என்ற நிலை ஏற்பட்டபோது அதன் மேல்கட்டுமானம் இனியும் அந்த உற்பத்தி முறையைக் கட்டிக்காக்கவும் ஒழுங்கமைக்கவும் சக்தியற்றதாகிவிட்டது. ஆனால் அந்த மேல்கட்டுமானத்தின் வாழ்வும் வளர்ச்சியும் அதன் அடித்தளத்தையே-நொறுங்கிவிழுந்து கொண்டிருக்கும் உற்பத்தி முறையை-சார்ந்து இருப்பதால் அது அந்த உற்பத்தி முறையை கட்டிக்காக்க வேகமாக செயல்படுகிறது. இதனால் அந்த மேல்கட்டுமானத்துடன் நொறுங்கிவிழும் அதன் அடித்தளம் முரண்படுகிறது. வளரும் உற்பத்திச் சக்திகளுடன் தேங்கி நிற்கும் உற்பத்தி உறவுகள் முரண்பட்டது போல் நொறுங்கிவிழும் அடித்தளத்துடன் அதை கட்டிக்காக்க முனையும் மேல்கட்டுமானம் முரண்படுகிறது.

குறிப்பிட்ட உற்பத்தி முறையில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு உற்பத்தி உறவுகள் தடையாகி விடும்போது அது வர்க்கப் புரட்சியாக வெடிக்கிறது. தகர்ந்து வரும் உற்பத்தி முறையை (அடித்தளத்தை) அதன் மேல்கட்டுமானம் கட்டிக்காக்க முயலும்போது அது அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடாக வெளிப்படுகிறது. இதன் விளைவாக புதிய சமுதாயம் (அதன் அடித்தளமும் மேல்கட்டுமானத்துடன்) புதிய முரண்பாடுகளுடன் தோன்றுகிறது. எனவேதான் மாவோ கூறினார் :

"சமூக மாறுதல்களோ சமூகத்தில் உள்ள அக முரண்பாடுகளால்தான் பிரதானமாக ஏற்படுகின்றன. அதாவது உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு, வர்க்கங்களுக்கு இடையேயான முரண்பாடு,



பழைமைக்கும், புதுமைக்கும் இடையேயான முரண்பாடு முதலியவையே சமூக மாறுதல்களின் காரணங்கள். இம்முரண்பாடுகளின் வளர்ச்சியே பழைய சமுதாயத்தை அகற்றிப் புதிய சமுதாயத்தை நிறுவுவதற்கான சக்தியை வழங்குகிறது."

—முரண்பாடு பற்றி (MSW 659, NBA)

எனவே ஒரு பொருளின் அல்லது சமுதாயத்தின் வளர்ச்சி அல்லது மாற்றம் என்பது அந்தப் பொருள் அல்லது சமுதாயத்தின் சாராம்சத்திற்குள்ளே அடங்கியுள்ள முரண்பாடுகளின் விளைவாகும். "பொருள்களின் சாராம்சத்திற்குள்ளே அடங்கியுள்ள முரண்பாட்டைப் பற்றிப் பயில்வதுதான் இயக்கவியலின் சரியான அர்த்தமாகும்" என்றார் லெனின்.

"ஒரு பொருளின் வளர்ச்சி என்பது அப்பொருளுக்குள்ளே இருந்தும் அதற்கு அவசியமாகத் தன்னைத்தானே இயக்கிக்கொள்வதிலிருந்தும் தோன்றுகிறது என்பது இயக்கவியல் பொருள்முதல்வாதம். ஒரு பொருளின் வளர்ச்சிக்கான அடிப்படையான காரணம் பொருளுக்கு வெளியிலிருந்து வருவதில்லை உள்ளேயிருந்தே உண்டாகிறது. இது அப்பொருளுக்குள்ளேயுள்ள முரண்பாடுகளைப் பொறுத்து அமைந்துள்ளது. எனவே அது இயங்குகிறது. வளர்கிறது. ஒரு பொருளுக்குள்ளே உள்ள முரண்பாடுகள்தாம் அப்பொருளின் வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணம்" என்றார் மாவோ.

—முரண்பாடு பற்றி (MSW 659, NBA)

எனவே ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி அல்லது மாற்றத்துக்கான காரணங்களையும் அச்சமுதாயத்தின் சாராம்சத்துக்குள்ளே அடங்கியுள்ள முரண்பாட்டில்தான் காணவேண்டும், வெளியில் அல்ல. முதலாளித்துவ சமுதாயத்தின் இயக்கத்துக்கும் வளர்ச்சிக்கும், மாற்றத்துக்குமான காரணங்களை முதலாளித்துவ உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு மற்றும் முதலாளித்துவ அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடு ஆகியவற்றில்தான் காணவேண்டும். அதேபோல்தான் ஒவ்வொரு சமுதாயத்திலும் அதன் அடிப்படை முரண்பாடு உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி, உறவுகளுக்கும் இடையிலானதும் அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலானதும் ஆகும் என்று கூறும்போது அந்த குறிப்பிட்ட சமுதாயத்தின் உற்பத்திச்

படிப்பகம்

www.padippkam.com



சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும் அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும்தான் குறிப்பிடுகிறோம்.

சோசலிச சமுதாயத்தை முன்னோக்கி இயக்குகிற அடிப்படை முரண்பாடுகள் பற்றி மாவோ குறிப்பிடும்போது சோசலிச சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும், சோசலிச சமுதாயத்தில் அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும்தான்-இவை இதற்கு முந்திய சமுதாயங்களின் அடிப்படை முரண்பாடுகளிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டது-குறிப்பிட்டார்

ஆனால் மா. அ. க. வினர் சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகள் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலானது என்பதையும் அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலானது என்பதையும் அந்தந்த சமுதாயத்திற்குள்ளாக இருக்கும் முரண்பாடுகளின் எதிர் அம்சங்களுக்கிடையிலான விசயமாய் பார்க்காமல் வெவ்வேறு சமுதாயங்களுக்குரிய வெவ்வேறு முரண்பாடுகளின் எதிர்மறை அம்சங்களுக்கிடையே உள்ள முரண்பாடாகப் பார்க்கிறார்கள். அதாவது நிலவுகிற சமுதாயத்தின் உற்பத்தி உறவுகளுக்கும் வரப்போகிற சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடாகவும்-இதையே இன்னும் மோசமாகப் புரிந்துகொண்டு நிலவுகின்ற சமுதாயத்தின் அடித்தளத்திற்கும் வரப்போகின்ற சமுதாயத்தின் அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடாகவும்- நிலவுகின்ற சமுதாயத்தின் மேல்கட்டுமானத்திற்கும் வரப்போகின்ற சமுதாயத்தின் அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடாகவும் புரிந்துகொண்டு கூறுகிறார்கள்.

இவர்களுடைய கூற்றுப்படி முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடு முதலாளித்துவ உற்பத்திச் சக்திகளுக்கும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலானதோ முதலாளித்துவ அடித்தளத்திற்கும் முதலாளித்துவ மேல்கட்டுமானத் திற்கும் இடையிலானதோ அல்ல. மாறாக முதலாளித்துவ அடித்தளத்திற்கும் சோசலிச அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடும் முதலாளித்துவ மேல்கட்டுமானத்திற்கும் சோசலிச அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடும் ஆகும்.

இத்தகைய கண்ணோட்டம் ஒரு பொருளின் அல்லது சமுதாயத்தின் வளர்ச்சி அல்லது மாற்றம் அந்தப் பொருளில் அல்லது



சமுதாயத்தில் உள்ள முரண்பாடுகளின் எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டங்களால் உண்டாகிறது என்பதை மறுக்கிறது. அதாவது வளர்ச்சிக்கும் மாற்றத்துக்குமான உந்து சக்தி அந்தப் பொருள் அல்லது சமுதாயத்திற்குள்ளாகவே இருக்கிறது என்பதை மறுக்கிறது. மாறாக மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் மூல உந்து சக்தி அவற்றுக்கு வெளியில் இருப்பதாகக் கருதுகிறது. இவ்வாறு கருதுவது மார்க்சிய இயக்கவியலுக்கு எதிரானதாகும்

இத்தகைய அணுகுமுறைக்குக் காரணம் ஒரு சமுதாயத்திற்குள்ளாகவே அடுத்த சமுதாயத்திற்கான அடித்தளம் தோன்றிவிடுகிறது என்று மா. அ. க. வினர் கருதுவதன் விளைவாகும். அதாவது ஒரு சமுதாயத்திலேயே அச்சமுதாயத்தின் முரண்பாட்டின் ஒரு அம்சமாக புதிய சமுதாயத்தின் அடித்தளம் இருக்கிறது என அவர்கள் கருதுவதாகும். உதாரணமாக அவர்கள் கூறுவதையே கூறலாம்: "அரை நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகளும் உறவுகளும் தரகு முதலாளித்துவ உற்பத்தி முறைகளும் உறவுகளும் சமுதாயத்தின் அடித்தளமாக இருக்கும்போதே அதற்கு சேவை செய்கின்ற மேல்கட்டுமானம் இருக்கின்றபோதே புதிய ஜனநாயக உற்பத்திக்கான உறவுகளும் சக்திகளும் (அடித்தளம்) தோன்றிவிடுகின்றன." (மா. அ. க. பக். 25)

மேலும் கூறுகின்றனர்:

> "புதிய ஜனநாயக அடித்தளமும் மேல்கட்டுமானமும் அதைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற வர்க்க சக்திகளும் தோன்றி பழைய அடித்தளத்தையும் மேல்கட்டுமானத்தையும் எதிர்த்துப் போராடிக்கொண்டிருப்பது பழைய உற்பத்தி உறவுகளுக்கும் புதிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான போராட்டமாக வெளிப்படுகிறது. அதாவது இரண்டு அடித்தளங்களுக்கு இடையிலான போராட்டமாக இருக்கின்றது. இன்னொரு வடிவத்திலும், அதாவது பழைய மேல்கட்டுமானத்திற்கும் புதிய அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடாகவும் வெளிப்படுகிறது."
>
> — மா. அ. க. பக். 25

எனவே மா. அ. க. வினரின் கருத்துப்படி முதலாளித்துவ சமுதாயத்திலேயே சோசலிச உற்பத்தி சக்திகளும் உறவுகளும் (அடித்தளம்) தோன்றிவிடும்.

படிப்பகம்

www.padippkam.com



மா. அ. க. வினரின் மேற்கண்ட கோட்பாட்டின்படி ஒரு சமுதாயத்தில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் அச் சமுதாய உற்பத்தி உறவுகளையும் மேல்கட்டுமானத்தையும் உடைத்தெறியாமலேயே அடுத்த கட்ட உயர்ந்த சமுதாயத்தின் உற்பத்தி முறை அந்த சமுதாயத்தில் தோன்றிவிடுகிறது. இவ்வாறு நிகழ்வதற்கு ஒன்று உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த உற்பத்தி உறவுகள் தாமே தமது குணத்தைக் கைவிட்டு புதிய உறவாக மாறியிருக்க வேண்டும். அவ்வாறாயின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாய் இருந்த உற்பத்தி உறவுகளின் சுரண்டும் ஆதிக்க வர்க்கம் தானே தன் குணத்தை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறாயின் உற்பத்தி உறவுகளை மாற்றி அமைக்க- சமுதாயத்தை மாற்றியமைக்க - சமுதாயப் புரட்சியோ அரசியல் புரட்சியோ எதுவும் தேவை இல்லை. புரட்சி பற்றி பேசுவதெல்லாம் வீண்தான். இங்கு உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு இருப்பதாகவும் அதுதான் சமுதாயத்தை முன்னோக்கி இயக்கும் அடிப்படை முரண்பாடாக (முரண்பாடுகளில் ஒன்றாக) இருக்கிறது என்றும் கூறுவதெல்லாம் பொய்யும் புனைச்சுருட்டும் தான். அல்லது அந்த சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள், உறவுகளுக்கு அப்பால், அதிலிருந்து அல்லாமல், தனியே வேறு எங்கிருந்தோ புதிய உற்பத்திச் சக்திகளும் உறவுகளும் (அடித்தளம்) படைக்கப்பட்டிருக்க வேண்டும். இது மாயாவாதமன்றி மார்க்சியமல்ல. எவ்வாறாயினும் இவ்விரண்டுமே சமுதாய வளர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்திச் சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடு, வர்க்கப் போராட்டம், மேல்கட்டுமானத்திற்கும் அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடு ஆகியவையே அடிப்படையாய் இருக்கின்றன என்பதை உணர்வுப்பூர்வமாகவே மறுத்துவிடுகின்றன. மா. அ. க. வினர் மாவோவுக்கு விளக்கம் கூறுவதாகப் புறப்பட்டு மார்க்சிய வரலாற்றியல் பொருள் முதல்வாதத்துக்கு எதிராக நிற்பதற்காக வெட்கப்படவேண்டும்.

அது மட்டுமல்ல மா. அ. க. வினர் பொருளாதார அடித்தளத்திற்கும் அரசியல், சித்தாந்தம் போன்ற மேல்கட்டுமானத் திற்கும் இடையில் உள்ள உறவையும் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர்.

"ஒரு சமுதாயத்தின் ஒரு குறிப்பட்ட வளர்ச்சிக் கட்டத்தில் பொருளாதார கட்டுமானமே அடித்தளமாக இருக்கிறது. சமுதாயத்தின் அரசியல், சட்ட, மத, கலை. சித்தாந்த கருத்துக்களும் அரசியல், சட்டம் மற்றும் அவற்றுக்குப் பொருத்தமான பிற நிறுவனங்களும் மேல் கட்டுமானமாகும்."

– மொழியியலில் மார்க்சியம் - ஸ்டாலின்



என்ற ஸ்டாலின் மேற்கோளிலிருந்து குறிப்பிட்ட அடித்தளத்தின் அரசியல், சித்தாந்தம் போன்ற மேல் கட்டுமானம் அதற்குரிய அடித்தளம் இருந்தால் மட்டுமே தோன்ற முடியும் என்று மா. அ. க. வினர் கருதுகின்றனர். அதாவது முதலாளித்துவ கருத்துக் களும், நிறுவனங்களும் முதலாளித்துவ உற்பத்தி முறை (அடித்தளம்) இருந்தால் மட்டுமே தோன்ற முடியும் என்றும் அதே போல் சோசலிசக் கருத்துக்களும் நிறுவனங்களும் சோசலிச சமுதாய அடித்தளம் (உற்பத்திமுறை) இருந்தால்தான் தோன்ற முடியும் என்றும் கருதுகின்றனர். அதனால்தான் இங்கு புதிய ஜனநாயகப் புரட்சி நடைபெறும் முன்னதாகவே புதிய ஜனநாயக சமுதாயத்தின் அடித்தளம் தோன்றிவிட்டது என்கிறார்கள்.

விஞ்ஞான சோசலிசக் கருத்துக்களும் அதற்கான அமைப்புகளும் முதலாளித்துவ சமுதாயத்தில்தான் தோன்றின. சோசலிச, கம்யூனிச சமுதாயத்தைப் பற்றி விஞ்ஞான பூர்வமாகவே முன்வைக்கப்பட்ட மார்க்சிய கருத்துக்களும் நிறுவனங்களும் முதலாளித்துவ சமுதாயத்திலேயே தோன்றின. ஆனால் சோசலிச சமுதாய அடித்தளம் (உற்பத்தி முறை) எங்குமே தோன்றியிருக் கவில்லை. சோசலிசப் புரட்சிக்கான கருத்துகளும், கட்சியும், அமைப்புகளும், ரசியாவில் தோன்றிய போது அங்கு சோசலிச சமுதாய அடித்தளம் எதுவும் இருக்கவில்லை. இவ்வாறு சோசலிச சமுதாய அடித்தளம் இன்றியே சோசலிசக் கருத்துக்களும் அமைப்புகளும் தோன்றியது எவ்வாறு?

விசயம் இதுதான், ஒரு சமுதாயம் பற்றிய கருத்துக்களும் அவற்றுக்குப் பொருத்தமான நிறுவனங்களும் தோன்றுவதற்கு சமுதாய வாழ்நிலை - உற்பத்தி முறை - காரணமாய் இருக்கிறது என்பதில் ஐயமில்லை. சோசலிசக் கருத்துக்கள் தோன்றுவதற்கு முதலாளித்துவ உற்பத்தி முறையே காரணமாய் இருக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளித்துவ உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடும் அதனால் எழும் வர்க்கப் போராட்டமும் அடித்தளத்திற்கும் மேல் கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடும் காரணமாயிருக்கின்றன. எனினும் சோசலிச சமுதாயம் பற்றிய கருத்துக்கள் சோசலிச உற்பத்தி முறையிலிருந்து

படிப்பகம்

www.padippkam.com



தோன்றுவதில்லை. அது போலவே முதலாளித்துவ உற்பத்தி முறையிலிருந்தும் தோன்றுவதில்லை. அக்கருத்துக்கள் ஒரு பௌதீக சக்தியாக - அமைப்பாக - எழுந்தால்கூட அடித்தளத்தில் இருந்து வருவதில்லை. மாறாக அதற்கு அக்கம்பக்கமாக அதிலிருந்து தனித்து சுதந்திரமாகவே தோன்றி வளர்கிறது.

மார்க்ஸ் கூறினார் :

"பொருளாதார அடித்தளத்தின் மாற்றமானது உடனடியாக அல்லது சற்றுப் பின்னாக முழு பிரமாண்டமான மேல்கட்டுமானத்தின் மாறுதலுக்கு இட்டுச்செல்கிறது. இத்தகைய மாறுதல்களை ஆய்வு செய்யும்போது இயற்கை விஞ்ஞானத்தை எவ்வளவு துல்லியமாக வரையறுக்க முடிகிறதோ அவ்வளவு துல்லியமாக வரையறுக்கப்படக் கூடிய உற்பத்தியின் பொருளாதார நிலைமைகளில் ஏற்படக்கூடிய பௌதீக ரீதியான மாறுதல்களையும் சட்டம், அரசியல், மதம், கலாச்சார ஞானம், தத்துவம் முதலிய - சுருக்கமாகச் சொன்னால் சித்தாந்த ரீதியான வடிவங்களையும் எப்போதும் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும். இந்த சித்தாந்த வடிவங்களுக்கு உள்ளேதான் இந்த மாறுதல் பற்றிய உணர்வு மனிதர்களுக்கு ஏற்பட்டு ஒரு முடிவு காணும்வரை சண்டை செய்கிறார்கள்."

—மார்க்ஸ், அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு

எனவே, அரசியல், கலாச்சாரம் போன்ற மேல்கட்டுமானம் என்பது ஏற்கெனவே நிலவும் சித்தாந்த வடிவங்களுக்கு உள்ளிருந்து அவற்றின் வளர்ச்சியாகவே அவற்றுக்கு உள்ளிருக்கும் மோதலிலிருந்தே தோன்றுகிறது என்பதாகும். எனினும் அவை உருவாவதற்கும் செயல்படுவதற்குமான களம் சமுதாய அடித்தளமாகவே இருப்பதால் அதற்கு பின்தங்கிவிடுவதோ வெகுதூரம் முன்தள்ளிப் போய்விடுவதோ சாத்தியமில்லை. சோசலிச சமுதாயம் பற்றிய விஞ்ஞானப்பூர்வமான கருத்துக்கள் தோன்றியதைப் பற்றி லெனின் குறிப்பிடுகிறார் :

"சோசலிசம் பற்றிய கோட்பாடுகள் சொத்துள்ள வர்க்கங்களின் படித்த பிரதிநிதிகளாலும், அறிவாளிகளாலும் விரிவாக விளக்கப்பட்ட தத்துவார்த்த, வரலாற்றுப் பொருளாதாரக் கோட்பாடுகளிலிருந்தே தோன்றி செயல்பட்டன. நவீன விஞ்ஞான சோசலிசத்தின் நிறுவனர்களான மார்க்சும் ஏங்கெல்சும் கூட



அவர்களுடைய சமூக நிலையில் முதலாளித்துவ அறிவுத்துறையைச் சேர்ந்தவர்களே." (என்ன செய்ய வேண்டும்? என்ற கட்டுரையில்)

மேலும் புதிய சமுதாயத்திற்கான தத்துவவாதிகள் எப்படித் தோன்றுகின்றனர் என்பது பற்றி மார்க்ஸ் கூறுகிறார்.

"வர்க்கப் போராட்டம் தன்னுடைய இறுதியான, தீர்மானமான நேரத்தை நெருங்கும் காலங்களில் ஆளும் வர்க்கத்தின் உள்ளே நெகிழ்ச்சியும் சிதைவும் தொடங்க ஆரம்பிக்கும். உண்மையில் பழைமையான சமுதாயத்தின் அனைத்து பரிமாணங்களிலும் இது காணப்படும். இந்நெகிழ்ச்சியும் சிதைவும் மிகவும் பயங்கரமாக உருவெடுத்து மிகவும் வெட்ட வெளிச்சமாகி ஆளும் வர்க்கத்தின் சிறிய பிரிவொன்று தன்னை அதிலிருந்து விடுவித்துக் கொண்டு எதிர்காலத்தை உருவாக்கக் கூடிய புரட்சிகர வர்க்கத்தோடு தன்னை இணைத்துக்கொள்ளும். எனவே மிகச் சமீபத்தில் நடந்தது போலவே நிலப்பிரபு வர்க்கத்தினரிடமிருந்து ஒரு பிரிவு விலகி முதலாளித்துவ வர்க்கத்திற்குத் தாவிச் சென்றதைப் போலவே இப்போது முதலாளித்துவ வர்க்கத்திலிருந்து ஒரு பிரிவு பாட்டாளி வர்க்கம் நோக்கிச் செல்லும். அதிலும் குறிப்பாக வரலாற்றின் இயக்கப் போக்கை முழுவதும் தத்துவார்த்த ரீதியில் புரிந்துகொள்ளும் அளவிற்கு தன்னை உயர்த்திக் கொண்டுள்ள முதலாளித்துவ தத்துவவாதிகளில் ஒரு பிரிவினர் பாட்டாளி வர்க்கம் நோக்கிச் செல்வர்."

– மார்க்ஸ், ஏங்கல்ஸ் தே.படைப்புகள், 1-117
(LCW V Page 375)

மேலும் புதிய கோட்பாடுகளும், தத்துவங்களும் எவ்வாறு தோன்றுகின்றன என்பது பற்றி மார்க்சும், ஏங்கல்சும் கூறுகின்றனர்.

அவர்கள் கூறுகிறார்கள் :

"இந்தக் கணத்தின் உணர்வுகள் நிலவும் நடைமுறையினுடைய உணர்வல்லாத வேறு சில உணர்வுகளை உண்மையிலேயே வெளிப்படுத்த முடியும். இது உண்மையில் பிரதிநிதித்துவப்படாத சிலவற்றை உண்மையிலேயே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இப்போதிருந்து உணர்வு, உலகத்திலிருந்து தன்னைத்தானே விடுவித்துக் கொண்டு 'தூய' கோட்பாடாகவும், தத்துவமாகவும், அறநெறியாகவும், இறையியலாகவும் உருவாகிறது. ஆனால் இந்த கோட்பாடு, தத்துவம், அறநெறியியல் போன்ற அனைத்தும்கூட நிலவும் உறவுகளுடன் முரண்படுகின்றன. இது நிலவும் உற்பத்தி

www.padippkam.com



உறவுகள் நிலவும் உற்பத்திச் சக்திகளுடன் முரண்படும் போது மட்டுமே நிகழ முடியும்"

—மார்க்ஸ் ஏங்கெல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் தொகுப்பு நூல் 1. மாஸ்கோ 1977 பக். 33

எனவே ஒரு சமுதாயத்தில் புதிய சமுதாயத்திற்கான அரசியல், சித்தாந்தம் போன்ற மேல் கட்டுமானம் தோன்றுவதற்கு புதிய சமுதாயத்தின் அடித்தளம் இருக்க வேண்டும் என்பதில்லை. ஏனெனில் இவை தோன்றுவதற்கான நிலைமைகள் - உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு, அடித்தளத்திற்கும் மேல் கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடு, வர்க்கப் போராட்டம் இவற்றின் விளைவாக குறிப்பிட்ட சமுதாயம் நொறுங்கி சிதைவடைவதும், நெகிழ்வடைவதும் - நிலவும் சமுதாயத்திலேயே இருக்கின்றன. மேலும் புதிய சமுதாயத்திற்கான கருத்துக்கள் நிலவும் சமுதாயத்தின் அரசியல், மதம், சட்டம், கலாச்சாரம், தத்துவம் போன்ற சித்தாந்த ரீதியான வடிவங்களுக்குள் நடக்கும் போராட்டத்தின் மூலம் அவற்றிலிருந்தே உருவாகின்றன. இந்தக் கருத்துக்களைத் தமதாக்கிக் கொண்டு ஒரு பௌதீகச் சக்தியாக மாறி (கட்சியாகவும், ஐக்கிய முன்னணியாகவும், இன்னும் பல்வேறு அமைப்புகளாகவும்) நிலவும் உற்பத்தி உறவுகளையும் மேல் கட்டுமானத்தையும் உடைத்தெறியும் மாபெரும் சக்தியாக அந்த சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளிலேயே பிரதானமான சக்தியாய் விளங்கும் உழைக்கும் மக்கள் எழுகின்றனர். இவ்வாறு நிலவும் மேல் கட்டுமானமும் உற்பத்தி உறவுகளும் தகர்க்கப்பட்டு புதிய உற்பத்தி உறவுகளும் மேல் கட்டுமானமும் கொண்ட புதிய சமுதாயம் உருவாக்கப்படும் அரசியல், சமூகப் புரட்சி ஒன்று நடந்தேறுகிறது.

ஆனால் புதிய அடித்தளத்திற்கும் பழைய அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடு, புதிய அடித்தளத்திற்கும் பழைய மேல் கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடு ஆகியவையே ஒரு சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடு என்று மா. அ. க. வினர் கூறுவதன் மூலம் எப்போதுமே புதிய சமுதாயக் கருத்துக்களும் நிறுவனங்களும் அதற்குரிய அடித்தளத்தில் இருந்தே தோன்றுகிறது அல்லது புதிய சமுதாய அடித்தளமே அச்சமுதாய கருத்துக்களும் நிறுவனங்களும் தோன்றுவதற்கான நிலைமைகளைத் தருகிறது என்ற மார்க்சிய விரோத கருத்துக்களையே வெளியிடுகிறார்கள்.

சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடு பற்றிய மா. அ. க. வினரின் கோட்பாடு இன்னொரு மார்க்சிய விரோத கருத்தின் விளைவாகவும் இருக்கிறது. அதாவது கருத்துக்களுக்கும் பொருளுக்கும் இடையிலான உறவு பற்றியும் சரியான கருத்துக்கள் தோன்றும் நிகழ்முறை பற்றியும் அவர்கள் கொண்டுள்ள தவறான கருத்துக்களின் விளைவாகவும் அது இருக்கிறது.



ஒரு சமுதாயத்திலேயே புதிய சமுதாய கருத்துக்களும் நிறுவனங்களும் தோன்றுவதற்கு புதிய சமுதாய அடித்தளம் அந்த சமுதாயத்திலேயே இருக்க வேண்டும் என மா. அ. க. வினர் கருதுகின்றனர். அப்படி இருந்தால்தான் புதிய சமுதாய கருத்துக்களும், நிறுவனங்களும் புதிய சமுதாயத்திற்கான போராட்டங்களும் ஏற்பட முடியும் என்பது அவர்களுடைய கருத்து. அதாவது மனிதன் புதிய சமுதாயம் பற்றிய கருத்தை புலனறிவாக மட்டுமே பெறமுடியும் என்கின்றனர். ஆனால் அறிதல் பற்றிய மார்க்சிய இயங்கியல் வேறானதாகும்.

மாவோ கூறுகிறார் :

"புறவெளி உலகின் எண்ணற்ற நிகழ்ச்சிகள் மனிதனுடைய மூளையில் அவனுடைய ஐம்புலன்களின் உணர்வுகள் - பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், உணர்தல் - மூலம் பிரதிபலிக்கின்றன. முதலில் அறிவு புலனறிவாகிறது. புலனறிவு போதுமான அளவுக்குக் கிட்டியவுடன் ஒரு பாய்ச்சல் மூலம் அது பகுத்தறிவாக - கருத்தாக மாறுகிறது"

—சரியான கருத்துக்கள் எங்கிருந்து தோன்றுகின்றன?
(MSW 726 NBA)

எனவே புதிய சமுதாயம் பற்றிய கருத்துக்களை பெற புதிய சமுதாய அடித்தளம் நிலவ வேண்டும் எனக் கூறுவது புலனறிவு பகுத்தறிவாகும் நிகழ்முறையை மறுப்பதாகும். புலனறிவு மட்டுமே சாத்தியம் என்பதாகும். உண்மையில் அச்சமுதாயத்தில் உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு, மேல்கட்டுமானத்திற்கும் அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடு, வர்க்கப்போராட்டம் ஆகியவையும் அவற்றின் விளைவுகளும் பல்வேறு எண்ணற்ற நிகழ்வுத் தொகுப்புகளாக மனிதனின் ஐம்புலன்கள் வழியாக மூளையில் பிரதிபலிக்கிறது. இத்தகைய பிரதிபலிப்புகள் நிலவும் சமுதாயம் பற்றிய போதுமான புலனறிவை - அச்சமுதாயம் முதிர்ச்சியடைந்த நிலையில் - கொடுக்கின்றன. இப்புலனறிவே புதிய சமுதாயம் பற்றிய முன்னனுமானங்களைத் தரும் பகுத்தறிவாக ஒரு

படிப்பகம்

www.padippkam.com



பாய்ச்சலில் முன்னேறுகிறது. பின் இக்கருத்துக்கள் முற்போக்கான வர்க்கங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாய் இருக்கையில் அவற்றிடம் எடுத்துச்செல்லப்பட்டு ஒரு பௌதீக சக்தியாக மாறுகின்றன. அவை நிலவும் சமுதாய அடித்தளத்தையும், மேல்கட்டுமானத்தையும் மாற்றி, புதிய அடித்தளத்தையும், மேல்கட்டுமானத்தையும் நிறுவும் அரசியல், சமூகப் புரட்சிக்கு வித்திடுகின்றன.

புலனறிவு பகுத்தறிவாக ஒரு பாய்ச்சலில் மாறும் இவ்வியக்கப் போக்கே புரட்சிகரமான சித்தாந்தங்களுக்கு காரணமாகின்றன. இத்தகைய புரட்சிகர சித்தாந்தங்கள் உருவாக்கப்படாமல், பிரச்சாரம் செய்யப்படாமல் அரசியல், சமூகப் புரட்சிகள் எங்குமே சாத்தியமில்லை. எனவேதான் புரட்சிகரமான சித்தாந்தம் இன்றி புரட்சி இல்லை என்று லெனின் குறிப்பிட்டார். அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாட்டில் அடித்தளமே முதன்மை அம்சம், அதுவே தீர்மானகரமான அம்சம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சமுதாயத்தை மாற்றுகின்ற புரட்சிகர சூழ்நிலையில் மேல்கட்டுமானமே முதன்மையானதாகவும் தீர்மானகரமானதாகவும் மாறுகிறது. அதாவது புதிய அடித்தளத்தைக் கட்டுவதிலும் ஒழுங்கமைப்பதிலும் முதன்மை பாத்திரமாற்றுகிறது. ஆனால் மேல்கட்டுமானத்தின் தோற்றமும், வாழ்வும் அடித்தளத்தையே சார்ந்தது என்பதால் நிலவும் அடித்தளத்திற்கு பின்தங்கியோ மிக முன்னேறியோ சென்றுவிட முடியாது. எனவே அடித்தளமே எப்போதுமே முதன்மையானதாகவும் தீர்மானகர மானதாகவும் இருக்கிறது. எனவே தான் மாவோ கூறினார் :

> "அரசியல், கலாச்சாரம் முதலிய மேல்கட்டுமானம் பொருளாதார அடிப்படையின் வளர்ச்சியை தடுக்கும்போது அரசியல், கலாச்சார மாற்றங்கள் பிரதானமானவையாகவும், தீர்மானகரமானவையாகவும் ஆகின்றன. இப்படிச் சொல்லும்போது நாம் பொருள்முதல்வாதத் துக்கு எதிராகச் சொல்கிறோமா? இல்லை"
>
> —முரண்பாடு பற்றி (MSW 679 NBA)

சமுதாயத்தின் பொருளாதார அடிப்படை மாறுவதற்கு - புதிய பொருளாதார அடிப்படை உருவாவதற்கு - புதிய அரசியல், கலாச்சார மேல்கட்டுமானத்தின் தீர்மானகரமான பங்கையே இங்கு மாவோ குறிப்பிடுகிறார். இதைத்தான் 'புரட்சிகர சித்தாந்தம் இன்றி புரட்சி இல்லை' என்று லெனின் குறிப்பிட்டார்.

ஆனால் மா. அ. க. வினர் இவ்விசயத்தைப் புரிந்துகொள்ள வில்லை. புலனறிவு பகுத்தறிவாகும் இயக்கப் போக்கு பற்றிய



அறியாமையால் புரட்சிகர சித்தாந்தம் (மேல்கட்டுமானம்) பற்றி மார்க்சிய விரோத கருத்துக்களையே கொண்டுள்ளனர்.

சுருங்கச் சொன்னால் 'புதிய அடித்தளத்திற்கும் பழைய அடித்தளத்திற்கும் பழைய மேல்கட்டுமானத்திற்கும் புதிய அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடே அடிப்படை முரண்பாடுகள்' என்ற மா. அ. க. வினரின் கோட்பாடு கீழ்க்கண்ட மார்க்சிய விரோத கருத்துக்களின் வெளிப்பாடாகும்.

1 ஒரு பொருள் அல்லது சமுதாயம் தனது உள் முரண்பாடுகளில் உள்ள எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டங்களினாலேயே வளர்கிறது, மாறுகிறது என்பதை மறுத்து அதன் வெளிமுரண் பாடுகளே அதன் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் காரணம் என்பது. அதாவது ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியும் மாற்றமும் அச் சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு, அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத் திற்கும் இடையிலான முரண்பாடு ஆகிய அச்சமுதாயத்தின் உள் முரண்பாடுகளின் விளைவே என்பதை மறுப்பது.

2. ஒரு சமுதாயத்தின் புதிய மேல்கட்டுமானம் (புதிய சமுதாயம் பற்றிய கருத்துக்களும் நிறுவனங்களும்) உருவாவதற்கான நிலைமைகள் நிலவும் சமுதாயத்தின் முரண்பாடுகளிலேயே இருக்கின்றன என்பதையும் நிலவும் சமுதாய மேல்கட்டு மானத்தின் உள்ளேயே அவற்றுக்கிடையிலான போராட்டங் களிலிருந்தே அது தோன்றுகிறது என்பதையும் மறுப்பது.

3. நிலவும் சமுதாயத்தின் அடித்தளம் மற்றும் மேல்கட்டுமானம் பற்றிய புலனறிவே ஒரு பாய்ச்சலில் பகுத்தறிவாக, புதிய சமுதாயம் பற்றிய கருத்துக்களாக உருவாகின்றன என்பதை மறுத்துரைப்பது அதாவது புலனறிவு பகுத்தறிவாகும் நிகழ் முறையை மறுப்பது.

மா.அ.கவினரின் சமுதாய அடிப்படை முரண்பாடு பற்றிய கோட்பாடுகள் மார்க்சிய விரோதமானவை என்பதால் எதிர்ப்புரட்சித் தன்மை பெற்றவையாகவும் இருக்கின்றன.

1. ஒரு சமுதாயத்தில் பழைய அடித்தளத்திற்கும் புதிய அடித்தளத்திற்கும் இடையிலான முரண்பாடு எனக் கூறுவதன் மூலம் புதிய சமுதாய உற்பத்தி உறவுகள் (அடித்தளம்) நிறுவப்பட பழைய உற்பத்தி உறவுகளை (அடித்தளம்)யும்

படிப்பகம்

www.padippkam.com



அதைக் கட்டிக் காக்கும் அரசியல் மேல் கட்டுமானத்தையும் நொறுக்கி எறியும் அரசியல், சமூகப் புரட்சியின் அவசியத்தை மறுத்து விடுகிறது. எனவே புதிய சமுதாயத்திற்கான அரசியல், சமூகப் புரட்சிக்காக உணர்வுப் பூர்வமாக திட்டமிட்டு செயல்பட வேண்டிய கட்சி மற்றும் அதன் செயல்பாடுகளின் அவசியத்தையும் மறுத்துவிடுகிறது.

2. புதிய சமுதாயம் பற்றிய கருத்துக்களும் நிறுவனங்களும் அதன் அடித்தளத்திலிருந்து அல்லது அதனுடைய பிரதிபலிப்பாக உருவாகின்றன என்று கூறுவதால் ஒரு சமுதாயத்தில் நிலவும் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளில் - புதிய சமுதாய அடித்தளம் இல்லாத நிலையில் - புதிய சமுதாயம் பற்றிய புரட்சிகரக் கருத்துக்கள் தோன்ற முடியாது என்றும் அல்லது தோற்றுவிக்கக் கூடாது என்றும் போதிக்கிறது.

3. நிலவும் சமுதாயத்தின் அடித்தளம் மற்றும் மேல் கட்டுமானம் பற்றிய - சமூக, பொருளாதார, அரசியல் பற்றிய - போதிய புலனறிவிலிருந்தே புதிய சமுதாயம் பற்றிய புரட்சிகரக் கருத்துக்களைப் படைக்க முடியும், பிரச்சாரம் செய்ய முடியும் என்பதை மறுக்கிறது. அதாவது அறிதலின் இயங்கியலை - புலனறிவு பகுத்தறிவாகும்[1] இயக்கப் போக்கை - மறுப்பதன் மூலம் நிலவும் சமுதாய அமைவின் காவலனாகிறது.



# முதன்மை முரண்பாடு பற்றிய கோட்பாட்டில் மா. அ. க. வினரின் முரண்பாடுகளில் மேலும் சில

சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கு, சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகள், முதன்மை முரண்பாடு, புரட்சியின் கட்டம் மற்றும் இடைக் கட்டம் பற்றி மா. அ. க. வினர் கொண்டுள்ள தவறான, மார்க்சிய விரோத கருத்துக்களை முன்னர் விளக்கியுள்ளோம். எனவே புரட்சியின் முதன்மை முரண்பாட்டை சரியாகத் தீர்மானிப்பதற்கு அவர்களிடம் எந்த அடிப்படையும் இல்லை. ஆனால் விசயம் என்னவெனில் அவர்கள் தீர்மானித்த அவர்களுடைய கோட்பாடுகளுக்குக்கூட நேர்மையில்லாமல் முரண்பட்டு முடிவுகள் எடுக்கிறார்கள் என்பதுதான். மார்க்சிய சாயம் பூசிக்கொண்டு மார்க்சிய விரோதக் கருத்துக்களை முன்வைக்கும் யாரும் இத்தகைய முரண்பாடுகளில் சிக்கிக்கொள்வதில் வியப்பில்லை. இப்போது மா. அ. க. வினர் முதன்மை முரண்பாடு பற்றிய அவர்களது கோட்பாடுகளுக்கு எவ்வாறு முரண்பாடாக இருக்கிறார்கள் என்பதற்கு சில உதாரணங்களை மட்டுமே எடுத்துக்காட்டலாம்.

1. முதன்மை முரண்பாட்டைப் பற்றி அவர்கள் கூறுவது என்ன?

"அடிப்படை முரண்பாடுதான் முதன்மை முரண்பாடாக இருக்கும், இருக்கமுடியும்"

—மா. அ. க. பக். 9

இன்றைய சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகள் நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலானதும், ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலானதும் ஆகிய இரண்டு முரண்பாடுகள் ஆகும் என்று கூறுகின்றனர். எனவே அவர்களுடைய கருத்துப்படி இந்த இரண்டு முரண்பாடுகளில் ஒன்றுதான் முதன்மை

படிப்பகம்

www.padippkam.com



முரண்பாடாக இன்றைய சமுதாயத்தில் வரும். வரமுடியும். ஆனால் இதற்கு முரண்பாடாக மூன்றாவது ஒரு முரண்பாடு முதன்மை முரண்பாடாவது பற்றி எழுதுகிறார்கள்.

"ஏகாதிபத்தியம் உள்நாட்டு பிற்போக்குவாதிகளுக்கு நேரடியாக படைகளை அனுப்பிவைப்பது அல்லது நவீன காலனி அரசுகளாக மாற்றும்போது. அந்நிய ஏகாதிபத்தியமும் உள்நாட்டு பிற்போக்குச் சக்திகளும் ஒருபுறமும். பரந்துபட்டமக்கள் ஒருபுறமும் கொண்ட முரண்பாடு முதன்மை முரண்பாடாகிறது"

—மேற்படி பக்கம் 45.

இது அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றல்ல எனினும் முதன்மை முரண்பாடு ஆகும் என்கின்றனர். அவர்களுடைய கோட்பாட்டுக்கு அவர்களே முரண்படுகின்றனர்.

இன்னொரு இடத்தில் (பக். 50) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனியாக இந்தியா இருந்தபோது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டுக்கும் இடையிலிருந்த முரண்பாடே முதன்மை முரண்பாடாக இருந்தது என்கின்றனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாடு ஒரு அடிப்படை முரண்பாடல்ல, எனினும் அவ்வாறு கூறுகின்றனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்ற குறிப்பான ஏகாதிபத்தியத்தைக் குறிப்பிடும் சொல்லுக்கும் ஏகாதிபத்தியம் என்று பொதுவாக குறிப்பிடும் சொல்லுக்கும் ஒரே பொருள் இல்லை என்பதும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டுக்கும் இடையிலான முரண்பாடு தீர்க்கப்பட்டால் அதுவே ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்த்ததாகாது என்பதும் பள்ளிப் பிள்ளையும் அறியும் விசயமாகும். எனவே, இங்கும் அவர்கள் அவர்களுடைய முதன்மை முரண்பாட்டுக் கோட்பாட்டுக்கு முரண்படுகின்றனர்.

2) அடுத்து முதன்மை முரண்பாட்டைக் கணிப்பதற்கு கீழ்க்கண்ட அளவுகோலைக் கூறுகின்றனர்.

முதன்மை முரண்பாட்டைக் கணிக்கும்போது அரசியல் நடவடிக்கை அரசியல் அதிகாரத்தை மட்டும் வைத்துத் தீர்மானிப்பது சரியல்ல; மொத்த அரசியல், பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்தே தீர்மானிக்க வேண்டும்.

—மேற்படி பக். 15.



இதன் அடிப்படையில் -அதாவது மா. அ. க. வினரின் அணுகுமுறையிலேயே - காலனிய இந்தியாவின் அரசியல், பொருளாதாரத்தையும் அதன் அடிப்படையில் முதன்மை முரண்பாட்டையும் அதற்குப் பிந்திய (1947க்குப்பின்) இந்தியாவின் அரசியல், பொருளாதாரத்தையும் அதன் அடிப்படையில் முதன்மை முரண்பாட்டையும் காண்போம்.

காலனிய இந்தியாவில் (1947க்கு முன்) :

அரசியல் அதிகாரத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே இருந்தது. பொருளாதாரத்தில் ஏகாதிபத்திய மூலதன ஆதிக்கமும் கட்டுப்பாடும் இருந்தன. இந்திய பொருளுற்பத்தி அனைத்தும் ஏகாதிபத்திய மூலதனத்தின் விரிவாக்கப்பட்ட முதலாளிய உற்பத்திக்காகவே அதனை நோக்கியே அதன் நலனுக்காகவே ஒருமுனைப்படுத்தப்பட்டது. அரைநிலப்பிரபுத்துவ உற்பத்தி மிகு நிலை பெற்றிருந்தாலும் மேலாதிக்கம் பெற்றிருந்தது ஏகாதிபத்தியத்தின் பொருளாதார ஆதிக்கமே. எனவே, இவற்றில் அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கமே இருந்ததால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடாயிற்று.

இன்றைய இந்தியாவில் 1947க்குபின் :

மா. அ. க. வினர் கூறுவதை அப்படியே தருகிறோம்.

"அரசியல் அதிகாரம் ஏகாதிபத்தியத்தின் சமூக அடிப்படைகளான தரகு அதிகாரவர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களிடம் இருக்கிறது."

பொருளாதாரத்தில், "தரகு அதிகார வர்க்கத்தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறை மேலாதிக்கம் பெற்றுள்ளது. நிலப்பிரபுத்துவ உற்பத்தி மிகுநிலை பெற்றுள்ளது......" "இந்திய சமுதாயத்தில் மிகுநிலையாக உள்ள நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்காக ஒருமுனைப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தேவையான பரிணாம வளர்ச்சி அடிப்படையிலான சீர்திருத்தங்கள் கூட இதற்காகவே திசை திருப்பப்பட்டுள்ளன"

—மேலது. பக். 30-31.

www.padippkam.com



அரசியல் அதிகாரத்தில் தரகு அதிகார வர்க்க முதலாளி வர்க்கமும் நிலப்பிரபு வர்க்கமும் ஆதிக்கம் பெற்றிருப்பதாலும், பொருளாதாரத்தில் நிலப்பிரபுத்துவம் தொடர்ந்து மிகுநிலையில் இருந்தாலும் தரகு அதிகார வர்க்க தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தியே மேலாதிக்கம் பெற்றிருப்பதாலும், நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை கூட தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்காக ஒருமுனைப்படுத்தப் பட்டிருப்பதாலும் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் இணைந்த 'கண்ணோட்டத்தில் (மா. அ. க. வினரின் கண்ணோட்டத்தில்) பார்த்தால் கூட இன்றைய இந்திய சமுதாயத்தின் முதன்மை முரண்பாடு தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்கள் வர்க்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடாகவே இருக்க வேண்டும். ஆனால், மா. அ. க. வினர் நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடு என்று "அரசியல் பொருளாதார கண்ணோட்டம்" இன்றி தீர்மானித்துள்ளனர்.

3) தமது தவறான கருத்துக்களை வலியுறுத்துவதற்கு மாவோ மேற்கோள் ஒன்றை எடுத்துப்போட்டு அதற்குத் தவறான விளக்கம் தருகின்றனர்.

ஜப்பான் ஏகாதிபத்தியம் சீனாவை ஆக்கிரமித்து சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு முழு காலனியாக்குவதற்காக ஆக்கிரமிப்பு யுத்தம் தொடர்ந்தபோது பிற பகுதிகளில் 'பெருமுதலாளிகள் பெருநிலப்பிரபுக்களின் கூட்டு சர்வாதிகாரம்' நிலவியது. 1939இல் '*சீனப்புரட்சியும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும்*' என்ற கட்டுரையில் மாவோ அதைப்பற்றிக் கூறினார் :

> "சக்கரவர்த்திகளினதும் பிரபுக்களினதும் எதேச்சதிகார ஆட்சி தூக்கி எறியப்பட்டு அந்த இடத்தில் முதலில் நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுக்களின் அதிகார வர்க்க ஆட்சியும் பெருமுதலாளிகள் பெருநிலப்பிரபுக்கள் வர்க்கத்தின் கூட்டு சர்வாதிகாரமும் தோற்றம் பெற்றுள்ளன. கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தினதும் அதன் கைப்பாவைகளினதும் ஆட்சி நிலவுகிறது."

இம்மேற்கோளை வைத்துக்கொண்டு மா. அ.க. வினர் கீழ்க்கண்டபடி கூறுகின்றனர்.

> "ஜப்பான் சீனாவை ஆக்கிரமிப்பதறகு முன்பே சீனத்தின் அரசியல் அதிகாரத்தில் முதலில் நிலப்பிரபுத்துவ அதிகார வர்க்க ஆட்சியும் அதற்குப் பின்னர் நிலப்பிரபுக்களினதும் பெரு முதலாளி வர்க்கத்தினதும் கூட்டு சர்வாதிகாரம் தோற்றம் பெற்றதாகவும் மாவோ கூறியிருக்கிறார். ஜப்பான் சீனாவில் ஆக்கிரமிக்கும் வரை சீன சமுதாயத்தில் முதன்மை முரண்பாடு நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலானதாக இருந்து வந்துள்ளது என்றே சீனக் கம்யூனிஸட் கட்சி சொல்கிறது." என்றும் அரசியல் அதிகாரத்தில் ஏற்படும் பண்பு வகையான மாற்றங்களைக் கொண்டே முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிக்கவேண்டும் என்று கூறினால் "முதற் கட்டத்தில் சக்கரவர்த்திகள் மற்றும் பிரபுக்களுக்கும் மக்களுக்கும் இடையிலானதாகவும், இரண்டாவது கட்டத்தில் நிலப்பிரபு வர்க்கத்தின் யுத்தப் பிரபுத்துவ அதிகார வர்க்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலானதாகவும் மூன்றாவது கட்டத்தில் நிலப்பிரபுக்கள் பெரு முதலாளிகளுக்கும் மக்களுக்கும் இடையிலானதாகவும் முதன்மை முரண்பாடு இருந்திருக்க வேண்டும்." என்றும் கூறுகின்றனர்.

— மேலது பக். 28.

சீனத்தில் முதலில் நிலவிய சக்கரவர்த்திகளினதும் பிரபுக்களினதும் எதேச்சதிகார ஆட்சியும்; பின்னர் அமைந்த நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுத்துவ அதிகார வர்க்க ஆட்சியும் இரண்டுமே நிலப்பிரபுத்துவ ஆட்சியே. எனவே அவ்விரு கட்டங்களிலும் நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடு என்பதில் எந்த முரண்பாடும் இல்லை என்பதை இவர்கள் பார்க்க மறுக்கிறார்கள். மேலும் பெரு முதலாளிகள், பெரு நிலப்பிரபு வர்க்கத்தின் கூட்டு சர்வாதிகாரம் இருந்தபோது ஜப்பான் ஏகாதிபத்தியம் சீனத்தின் சில பகுதிகளைக் காலனியாக வைத்துக் கொண்டிருந்தது. முழுக் காலனியாக்குவதற்கான ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்துக்கொண்டிருந்தது (இந்த யுத்தம் 1931 செப்டம்பர் 18இல் தொடங்கியது) என்பதை மாவோவின் மேற்கோள் தெளிவு படுத்துகிறது. இத்தகைய நிலைமையில் ஜப்பான் ஏகாதிபத்தியத்திற்கும் சீன தேசத்திற்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடாக இருக்க முடியுமே அன்றி பெரு முதலாளிகள் மற்றும் பெரு நிலப்பிரபுக்கள் வர்க்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாயிருக்க முடியாது. மேலும், சீனத்தில் அப்போது இருந்த மைய அரசைப் பற்றி மாவோ 1936 டிசம்பரில் "சீனப்புரட்சி யுத்தத்தின் யுத்த தந்திரம்" என்ற கட்டுரையில் கீழ்க் கண்டபடி குறிப்பிடுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



"பெரும் யுத்தப் பிரபுக்கள் மத்திய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். சிறிய யுத்தப் பிரபுக்கள் மாகாணங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு வகையான பிற்போக்கு இராணுவங்கள் இருக்கின்றன. ஒன்று, சியாங்கே ஷேக்கின் கீழ் பெயரளவுக்கு மட்டுமேயுள்ள மத்திய இராணுவம், மற்றொன்று பல்வேறு யுத்தப் பிரபுக்களின் கட்டுப்பாட்டில் ஒவ்வொரு மாகாணத்திலும் இருந்த இதர வகைப் படைகள்"

எனவே ஜப்பான் ஏகாதிபத்தியம் சீனத்தின் மீது காலனியாக்குவதற்கான ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்கும்வரை நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடாயிருந்தது என்பதில் எந்தவித முரண்பாடும் இல்லை என்பதை மா. அ. க. வினர் உணரவேண்டும். அரசியல் அதிகார வகையில் ஏற்படும் பண்பு வகையான மாற்றங்களை ஆய்வு செய்து அதனடிப்படையில் முதன்மை முரண்பாடு தீர்மானிக்கப்படுகிறது என்பதற்கும் மாவோவின் மேற்கோளுக்கும் முரண்பாடு காண முயலும் மா. அ. க. வினரின் முயற்சி வீண் முயற்சியே ஆகும். சீன வரலாற்றை மேலோட்டமாக அல்லாமல் ஆழ்ந்து படிப்பதன் மூலம் தமது தவறான புரிதலை மா. அ. க. வினர் அகற்றிக் கொள்ளவேண்டியது அவசியம்.

4) அடுத்து "கிராமப்புற பணியா நகர்ப்புறப் பணியா இதில் எதற்கு முதலிடம் கொடுப்பது. எந்தெந்த அமைப்புகளைக் கட்டுவது, நடத்துவது, புரட்சியின் உந்து சக்திகள், ஐக்கிய முன்னணியின் தன்மை ஆகிய எல்லாவற்றையும் தீர்மானிப்பதற்கே முதன்மை முரண்பாட்டைக் கணிப்பது மிகவும் தலையாயதாகும். பொதுவாக சொல்வதானால் எந்தப் புரட்சியின்தும் மிகத் தலையாய பிரச்சினை என்னவென்றால் அதிகபட்ச நண்பர்களை வென்றெடுப்பதும் எதிரிகளைத் தனிமைப்படுத்துவதும்தான் அதனடிப்படையில் யாருக்கு எதிராக எந்தெந்த சக்திகளைத் திரட்ட வேண்டும் என்பது புரட்சிகர இயக்கத்தின் நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்." (மேலது பக். 4,5) என்று கூறுகின்றனர்.

அவர்களுடைய கோட்பாட்டின்படி அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றுதான் முதன்மை முரண்பாடு ஆகும் எனக்கொண்டால் குறிப்பிட்ட ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்கும் போதும், காலனியாகவோ, நவீன காலனியாகவோ ஆக்கும்போதும், பிற்போக்கு சக்திகளுக்கு ஆதரவாக இராணுவத்தை



அனுப்பும்போதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைத்தான் கட்டமுடியுமே தவிர குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஐக்கிய முன்னணியைக் கட்ட முடியாது. அவ்வாறாயின் அதிகபட்ச சக்திகளை புரட்சியின் பின் எவ்வாறு அணிதிரட்டுவார்கள்?

இன்று அதிகபட்ச மக்களை அடக்கி ஒடுக்கிக்கொண்டிருப்பது இன்றைய ஆளும் வர்க்கங்களின் அரசியல் அதிகாரம்; அதை எதிர்த்துத்தான் பரந்துபட்ட அதிகபட்ச மக்களைத் திரட்ட முடியும். அவ்வாறு இருக்கும்போது இப்போதைய இவர்களுடைய நிலப்பிரபுத்துவ கோட்பாட்டால் அதிகபட்ச மக்களை எப்படித் திரட்டுவார்கள்? இந்திய ஆளும் வர்க்கப் பிரிவுகள் பாசிச அல்லது இராணுவ சர்வாதிகாரத்தைக் கொண்டு வருமாயின் (அதற்கான ஆபத்தும் இருக்கிறது என்று மா. அ. க. வினர் கூறுகின்றனர்) அப்போது தமது நிலப்பிரபுத்துவ கோட்பாட்டின் அடிப்படையில் அதிகபட்ச சக்திகளை புரட்சியின் பக்கம் எப்படி வென்றெடுப்பார்கள்? சரியான அமைப்பைக் கட்டுவார்கள்? ஒன்று முதன்மை முரண்பாடு பற்றிய தமது கோட்பாட்டை மாற்றி பாசிசம் அல்லது இராணுவ சர்வாதிகாரத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டை முதன்மை முரண்பாடாக்க வேண்டும் அல்லது தமது நிலப்பிரபுத்துவக் கோட்பாட்டை மாற்றாமலேயே அதற்கு முரணாக பாசிச எதிர்ப்பு அமைப்புகளையும், முன்னணியையும் கட்டவேண்டும் அல்லது செயலற்றவர்களாக இருக்கவேண்டும். இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? தமது தவறான கோட்பாடுகளுக்காக சரியான நடைமுறையைக் கைவிடப் போகிறார்களா அல்லது தவறான கோட்பாட்டை வைத்துக்கொண்டு அதற்கு முரண்பாடாக செயல்படப் போகிறார்களா?

அடுத்து நகர்ப்புறப் பணியா, கிராமப்புறப் பணியா, எப்படிப்பட்ட அமைப்புகளைக் கட்டுவது என்பதும் கூட முதன்மை முரண்பாடு தீர்மானிக்கப்படுவதைப் பொறுத்துதான் இருக்கிறது என்கிறார்கள். ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடு எனத் தீர்மானிப்பதால் நகர்ப்புற பணியும் நிலப்பிரபுத்துவத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு பிரதானமானது எனக் கணித்தால் கிராமப்புற பணியும் முக்கியமானதாய் இருக்கும் என்று கருதுகிறார்கள் போலும். ஏகாதிபத்தியம் மற்றும் உள்நாட்டு பிற்போக்குக் கும்பலுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடு

படிப்பகம்

www.padippakam.com



எனக்கணித்தால் ஒரு வேளை நகர்ப்புறம் 50சதவீதமும் கிராமப்புறம் 50 சதவீதமும் முக்கியத்துவம் பெறும் என்று கூட இவர்கள் கணித்திருக்கலாம். (இவர்களுடைய கணக்குப்படி அப்படித்தான் வரவேண்டும்) பிற முரண்பாடுகள் முதன்மை முரண்பாடுகளானால் நகர்ப்புற, கிராமப்புற பணிகளை எப்படி பகிர்வது என்று தெரியாமல் விட்டுவிட்டிருப்பார்கள் போலும். இந்நாட்டில் 80சதவீத மக்கள் கிராமப்புறங்களில் வாழ்வதாலும், புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டம் முழுவதும் விவசாயப் புரட்சியே சாராம்சமாக இருப்பதாலும் புரட்சி நடத்த விரும்பும் எந்த கட்சிக்கும் கிராமப்புறப் பணியே முக்கியமாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதில் முதன்மை முரண்பாட்டின் மாற்றம் கிராமப்புற பணியை எப்போதும் முக்கியத்துவமற்றதாய் ஆக்குவதில்லை. ஆனால் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடல்லாத காலங்களில் - மா. அ. க. வினர் விவசாயப் புரட்சியை கைவிட விரும்புவதால் கிராமப்புறப் பணியையும் முக்கியமான பணியாய் இருப்பதிலிருந்து கைவிட விரும்புகின்றனர் என்பதையே முதன்மை முரண்பாட்டின் அவசியம் குறித்த அவர்களுடைய விளக்கம் தெளிவுபடுத்துகிறது.

## பின்குறிப்பு

1. 1982 தொடக்கத்தில் கட்சிக்குள் சுற்றுக்கு விடப்பட்டு 1984 பிப்ரவரியில் தனி வெளியீடாக வெளியிடப்பட்டது.

2. MSW, NBA எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் மேற்கோள்கள் அனைத்தும் நேசனல் புக் ஏஜென்சி (பி) லிமிடெட் கல்கத்தா (NBA) என்ற நிறுவனத்தார் மாசேதுங் செலக்டட் ரைட்டிங்ஸ் (MSW) என்ற பெயரில் 1967 டிசம்பரில் வெளியிட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் தொகுப்பின் ஆங்கிலப் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

3. மா. அ. க. பக்கம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் மேற்கோள்கள் மாநில அமைப்புக் கமிட்டியினர் வெளியிட்டுள்ள "இந்திய சமுதாயத்தில் நிலவும் அடிப்படை முரண்பாடுகளும், பிரதான முரண்பாடும்" என்ற நூலின் பக்கங்களைக் குறிக்கும்.

## கலைச்சொற்கள்

| | |
|---|---|
| இயக்க வடிவம் | Form of Motion |
| சமுதாயவளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கு (அல்லது), சமுதாய நிகழ்ச்சிப் போக்கு (அல்லது) நிகழ்ச்சிப் போக்கு (அல்லது), சமுதாய வளர்ச்சிப் போக்கு (அல்லது) வளர்ச்சிப் போக்கு | Process of development of society |
| முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய இயல்பு | Universality of Contradiction |
| முரண்பாட்டின் சிறப்பியல்பு | Particularity of Contradiction |
| முரண்பாட்டின் பொதுத்தன்மை | General character of contradiction |
| முரண்பாட்டின் தனித்தன்மை | Individual character of contradiction |
| முதன்மை முரண்பாடு | Principal contradiction |
| அடிப்படை முரண்பாடு | Basic Contradiction |
| புலனறிவு | Perceptual knowledge |
| பகுத்தறிவு | Conceptual knowledge |
| புரட்சியின் இடைக்கட்டம் அல்லது துணைக்கட்டம் | Phase or Sub stage of Revolution |
| புரட்சியின் கட்டம் | Stage of Revolution |

படிப்பகம்